
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62:10**

**Translated from**
**BS#931**
**July-Aug 2022**

**பொருளடக்கம்**

✡ நமது புரிந்து கொள்ளுதலை முன்னேற்றமடையச் செய்தல்.................. 2

✡ தேவனுடைய பரிபாலனங்களும் நம்முடைய சாட்சியும் ........................ 12

✡ புதிய வானங்களும் புதிய பூமியும்............. 20

**BS Tamil Version - 73**

**2022**

# நமது புரிந்து கொள்ளுதலை முன்னேற்றமடையச் செய்தல்

Advancing our understanding

**"நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்" சங். 89:14.**

தேவன் எப்பொழுதாவது, யாரையாவது எந்த நோக்கத்துக்காவது அழைக்கும் போது, அழைக்கப்பட்டவர்களுக்கு முன்பாக அவர் ஒரு இலக்கை ஒரு நம்பிக்கையின் ஆதாரத்தை ஒரு தூண்டுணர்வை முன்வைக்கிறார். இதனை அவர் ஆபிரகாமிடத்தில் செய்தார். (R 3936).

நாம் பயன்படுத்துகிற சத்திய எழுத்துக்கள் அனைத்தின் மூல ஆதாரமும் அதன் ஆரம்பமும் யேகோவா தேவனையே கொண்டிருக்கிறது: சங். 89:14, "**நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்.**" நீதி என்பது யேகோவா தேவனுடைய அரசாங்கத்தின் அடிப்படையாயிருப்பதும் அவருடைய குணாம்சத்தின் கோட்பாடாகவும் இருக்கிறது. நீதி என்பது கிருபாசன பலகையிலும், நியாயமானது தனிச்சிறப்பான சன்மார்க் கத்தில் சமபங்காகவும் குறித்துக் காட்டப்படுகிறது. சிங்காசனம் என்ற வார்த்தையை நாம் கேட்கும் போது, ஆட்சியாளர் அமர்ந்திருக்கிற இடத்தைக் குறித்துக் காட்டலாம்; ஆயினும் இந்த பாடத்தில் அதிகாரம் இருக்கும் இடத்தைக் குறிப்பிடுகிற கருத்தை நான் விரும்புகிறேன். மனுஷன் சிருஷ்டிக்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பும், நம்முடைய பூமியானது அதன் ஒழுங்கற்ற நிலைமையி லிருந்து கொண்டு வரப்படுவதற்கு முன்பும், தேவதூதர்-களும், கேருபீன்களும் சிருஷ்டிக்கப்படுவதற்கு வெகு காலத்துக்கு முன்பும் யேகோவா தேவன் தனித்திருந்த போது, தேவனுடைய நோக்கம் நன்கு வரையறுக்கப்பட்டதும் முழுமையும் ஆயத்தமான ஒரு திட்டத்தை மனதில் கொண்டிருந்தது. பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக் காரர்களாகிய நாம் இதனை புரிந்து கொண்டு ஜீவிக்கிறோம்!

முதலாவது வெளிப்படுத்தப்பட்டது, ஜீவவார்த்தை லோகாஸ் (Logos) என்னும் குமாரனை சிருஷ்டித்ததாகும். அவர் தேவனுடைய வாய்க் கருவி அல்லது தனிப்பட்ட தூதுவர் ஆவார். இந்த ஜீவியானது ஜீவதத்துவத்தால் நிரப்பப்பட்டு அதுவே மரியாளின் கருமுட்டையை கருவுறச் செய்ய பயன்படுத்தப்பட்டது. ஒன்பது மாதங்களில் வார்த்தையானவர் ஒரு பூரண ஆவி ஜீவி நிலையிலிருந்து பூரணமான குழந்தை இயேசுவாக மாற்றப்பட்டார்; அவரே வேதவாக்கியங்களின் படி உண்மையும், விவேகமும் உள்ள ஊழியக்காரனை கண்டுபிடிக்கும் படியாக மீண்டும் வரவேண்டியிருந்தது. அதனை அவர் செய்து முடித்தார்.




மத். 24:46, "**எஜமான் வரும்போது** (1874) **அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான்.**"

ஒரு உக்கிராணக்காரன் விசுவாச வீட்டாருக்கு ஆகாரத்தைப் பகிர்ந்து அளிக்கும் படியாக நம்முடைய கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரே வாய்க்காலாக (channel) இருக்கிறார். லவோதிக்கேயா சபையின் முதல் அதிபதியாகிய/ முதன்மை மனிதனாகிய C.T. ரஸல் என்ற பரோஷியா தூதுவர் சபையை கூட்டிச் சேர்ப்பதற்குத் தேவையான சத்திய பண்டக சாலையின் மீது அதிகார முடையவராக கர்த்தரால் நியமிக்கப்பட்டார். அவர் சத்திய மேஜையில் வழங்குவதற்குத் தேவையான ஆகாரத்தைக் கொண்டு வந்ததுடன், அப்படி செய்வதின் மூலம் அவர் எபிஃபெனி சத்தியம் மற்றும் வேலைக்கான அஸ்திபாரத் தையும் ஏற்படுத்தினார். ஆம், "**ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது: கர்த்தர் தம்முடைய வர்களை அறிவாரென்பது… அதற்கு முத்திரையாயிருக்கிறது**" (2 தீமோ. 2:19).

எபி. 11:10: "**தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு** (மகிமைப்படுத்தப்பட்ட சபை) **அவன் காத்திருந்தான்**" என்று சொல்கிறது. இது சொல்லர்த் தமான நகரமல்ல, ஆனால் அதன் பூமிக்குரிய மற்றும் பரத்துக்குரிய நிலைமைகள் இரண்டையும் கொண்ட மகிமையான தேவனுடைய ராஜ்யம். இதன் நிரந்தரமான நிலை நீதிக்குரிய கோட்பாடுகள் அடிப்படையிலானது. (R 3936-தெய்வீக வாக்குறுதி). மனிதன் ஒரு பூமிக்குரிய நகரத்தை மட்டுமே கட்டமுடியும். ஆனால் யேகோவா தேவன் மட்டுமே பரத்துக்குரிய நகரத்தைக் கட்ட முடியும். நாம்

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, **Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

கற்றறிந்திருக்கிறபடி, நம் போதகருடைய வேலை திரள்கூட்டத்தார் மற்றும் வாலிபரான பாத்திரவான்களைக் கூட்டிச் சேர்ப்பதாக இருக்கவில்லை. அவர்கள் கூட்டிச் சேர்க் கப்படுவது எபிஃபெனி வேலையாகும். "**ஏழு மேய்ப்பர்கள் மற்றும் மனுஷரில் எட்டு அதிபதிகள்...**" (மீகா. 5:5) விசேஷித்த எபிபெனி சத்தியங்கள், ரஸல் போதகருடைய நாளில் காண்பதற்கு ஏற்ற காலமாக இருக்கவில்லை. எட்டாவது அதிபதியாகிய மனுஷன் (ஜாண்சன் போதகர்), மத். 13:52-க்கு இசைவாக, எபிஃபெனிக்கு தேவையாயிருந்த "**புதியவை களையும், பழையவைகளையும்**" புரிந்து கொண்டார். ஆம், "**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.**" (சங். 119:105).

நீதி. 4:18; "**நீதிமான்களுடைய பாதை** (ஒரே நீதிமானாகிய இயேசு கிறிஸ்து, அதன் பின்பு அவருடைய நீதிமானாக்கப்பட்ட அங்கத்தினர்களும்) **நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போலிருக்கும்.**" தேவனுடைய மகிமையாகிய அறிவாகிய வெளிச்சத்தைக் கொடுப்பதற்காக தேவன் நம்முடைய இருதயங்களில் பிரகாசித்திருக்கிறார். 2 கொரி. 4:6: "**இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன், இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங் களிலே பிரகாசித்தார்**" என்று கூறுகிறது. ரஸல் போதகருடைய வேலை அவருடைய நாளில் பிரகாசிக்கிற வெளிச்சத்தைப் போல, மகா மேன்மையும் பலனுள்ளதுமாய் இருந்தது. ஆயினும் இந்த வேதவாக்கியம் சொல்கிறது போல அது "**அதிகமதிகமாய் பிரகாசிக்கிறது.**" தேவனைப் பற்றி புரிந்து கொள்ளுதல் அடுத்தபடியாக அவருடைய எபிஃபெனி தூதுவரான ஜாண்சன் போதகருக்கு, திரள்கூட்டம் மற்றும் வாலிபரான பாத்திரவான்களுடன் தேவையான ஈடுபாடு கொள்வதற்காகக் கொடுக்கப்பட்டது.

மகா யேகோவா தேவன் தம்முடைய குமாரன் மூலமாக வேத வாக்கியங்கள் மற்றும் நிகழ்கால சம்ப வங்கள் பற்றிய பயபக்திக்குரிய படிப்பை ஆசீர்வதிப்பதன் மூலம் நமக்கு எபிஃபெனி வெளிச்சத்தை அறியும்படிச் செய்வதில் பிரியமாயிருந்து வருகிறார். இது தேவனுடைய தூதுவர்களை இப்படிப்பட்ட அநேக நிகழ்வுகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் பரிபாலனத்திற்குள்ளாக கொண்டு வந்திருக்கிறது. பிரதிஷ்டை செய்திருக்கிற தேவனுடைய பிள்ளையின் திறமையை தேவன் அளவி டுவதில் பரிபாலனத்தின் முக்கியத்துவத்தை பின்வரும் மூன்று வழிகளில் ஒன்றாக நாம் புரிந்து கொள்ளும்படியாக நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது: (1) பரிசுத்தாவியின் பல்வேறான அளவுகள், (2) அவர்களுடைய பல்வேறான தாலந்துகள் (3) அவர்களுடைய பல்வேறான பரிபாலன சூழ்நிலைகள். அநேகந்தரம் ஏற்றகால சத்தியமானது, சத்திய இயக்கங்களில் சில குறிப்பிட்ட தலைவர்களின் பேராசையி னால், தகாத முறையில் உரிமையை பறிக்கும் முயற்சி களுக்கு எதிராக உண்மையுடன் தேவ வசனத்தைக் காத்துக் கொள்வதற்கு ஒரு வெகுமதியாகவும் அதற்குப் பிறகு கிடைப்பதாகவும் தெரிகிறது. கர்த்தருடைய ஜனங்களுக்கு முன்பாக இன்னும் அதிகப்படியான எபிஃபெனி வெளிச்சம் வைக்கப்பட வேண்டியிருக்கிறது என்பது என்னுடைய புரிந்து கொள்ளுதலாகும். ஆம், ஆக்கப் பூர்வமாக முன்னேற்ற மடைந்து வரும் சத்தியம் ஏற்றகால ஆகாரமாக பூரணநாள் வரை கடந்து செல்வதாயிருக்கிறது!


வெளி. 14:13-ல் வெளிப்படுத்தியவர், இந்த ஊழியக் காரர்களைப் பற்றி தெரிவிக்கிறார். "**அவர்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்: அவர்களுடைய கிரியை- கள் அவர்களோடே கூடப்போம்.**" PT '49, பக்கம் 111, "லவோதிக்கேயா சபையின் தூதன் அந்த ஊழியக் காரனையும், எபிஃபெனி தூதுவரையும் உள்ளடக்கி யிருக்கிறது என்று அறிவிக்கிறது. இவர்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட ஏழாம் தூதனாக சத்தியத்தை, எக்காளமாக, ஏழாவது எக்காளமாக ஆயிரம் வருடங்கள் முழுவதுமாக ஊதுவார்கள்." எபிஃபெனி என்ற பெயர்ச் சொல் குறிப்பிடத்தக்க புரிந்து கொள்ளுதலையும் எபிஃபைனோ என்ற வினைச்சொல் தெளிவாக பிரகாசிப் பதையும் அர்த்தப்படுத்துகிறது. எபிஃபனியா என்பது வெளிச்சத்துடன் பிரகாசிப்பது ஆகும்.

எபிஃபெனி வேலையைப் பற்றிய நம்முடைய புரிந்து கொள்ளுதலில் நாம் வளர்வதால் ஜாண்சன் போதகர் நிறைவேறுதலான பானாவிடம் (ஜாலி போதகர்) தாம் பேசியதை, அதாவது, "நான் எப்போதும் உனக்கு சொல்லி யிருந்ததைக் காட்டிலும் அதிகமான வேலையை செய்ய வேண்டிய மிகப்பெரிய ஒப்பந்தம் உன்னிடத்தில் உள்ளது என்று கூறியதை நாம் கேட்கிறோம்." அவர், "**பலங்கொண்டு திடமனதாயிரு, கர்த்தர் இந்த போராட்டத்தில் உன்னோடிருப்பார், நானும் திரைக்கு அப்பாலிருந்து உன்னைக் கவனித்துக் கொண்டிருப்பேன்**" என்று சொல்லி முடித்தார். (PT '60, பக்கம் 61). இந்த கூடுதலான வேலையில் பெரும்பகுதி அடையாளத்தில் நிதனீமியர் வகுப்பாரான பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்களைப் பற்றிய முன்னேற்ற மடைந்துவரும் சத்தியமாக இருந்தது: இவர்கள் ஆணை- யோடு கூடிய உடன்படிக்கையின் பூமிக்குரிய அம்சங்க ளின்கீழ் அபிவிருத்தியடைந்தவர்கள்; ஆபிரகாமின் ஆயிரவருடத்துக்கு முந்தின வித்து; திரும்பக் கொடுத்தலுக்கு முந்தின ஐந்தாவது பிரதிஷ்டை செய்த வகுப்பார் (PT '77, பக்கம் 38); நீதிமான்களுடைய உயிர்த்தெழுதலில் பங்கடைவார்கள். (லூக். 14:14) இவர்கள் தங்கள் மனுஷீக உரிமைகளை செலவழித்து மரணத்திற்கென்று பிரதிஷ்டை செய்கிறார்கள். ஆகையால் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் என்ற வகையில் பிரதிஷ்டை செய்தவர்கள் குவாசி எலெக்ட் வகுப்பாரில் மீதியுள்ளவர்களைக் காட்டிலும், தேவனுக்கு முன்பாக உயர்ந்த ஸ்தானத்தையும், இந்த ஜீவியத்தில் உயர்வான ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்கள் என்பதைக் குறித்து வேதவாக்கியங்கள் தெளிவுபடுத்து வதைக் குறித்து புதுமையாக எண்ண வேண்டியதில்லை. ஆகவே அவர்கள் ஆயிர வருட யுகத்திலும், ஆயிர வருட யுகத்துக்குப் பின்னரும்கூட, குவாசி எலெக்ட்டில் மீத முள்ளவர்கள் மற்றும் தெரிந்து கொள்ளப்படாதவர்களைக்

காட்டிலும் மிக உயர்வான கனத்தையும், ஊழியத்தையும் பெற்றிருப்பார்கள். (PT '73, பக்கம் 29).

தேவனுடைய வார்த்தையின் மீதுள்ள நம்பிக்கையில், ஏற்ற காலத்தில் ஆக்கப்பூர்வமாக முன்னேற்றமடைந்து வரும் சத்தியத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோம். "**ஏற்ற காலங்களிலே நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய கட்டளையின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பிரசங்கத்தினாலே தமது வார்த்தையை வெளிப்படுத்தினார்.**" (தீத்து 1:4). தேவன் தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்த ஏற்ற காலங்களை வைத்திருக்கிறார். "காலங்கள்" என்ற வார்த்தை பொருத்தமான காலம் என்று அர்த்தம் தரும் கிரேக்கச் சொல்லான (Kairos) 'கைரோஸ்' என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஓ! தீர்க்கதரிசிகள் கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்தும், அதைத் தொடர்ந்து வரவேண்டிய நாளைக் குறித்தும் விசாரித்து ஜாக்கிரதையாக ஆராய்ந்து பார்த்தார்கள், ஆனால் அது ஏற்ற காலமாயிராதபடியால் அவர்கள் அறிந்து கொள்ள முடியவில்லை. மறைவானவைகள் தேவனுக்கு உரியவைகள்; ஆனால் வெளிப்படுத்தப்பட்டவைகள் அவருடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளுக்கே உரியவைகள். (உபா. 29:29).

இப்போது நாம் அபிவிருத்தியடைந்து வரும் உண்மையை சற்று விவரமாகப் பார்க்கலாம். இது 2 சாமு. 21-ம் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்த உண்மை சுமார் கி.மு. 1119-ல் சவுல், கிபியோனியர்களில் அநேகரைக் கொன்று போட்டபோது அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த கிபியோனியர்கள் இஸ்ரயேல் புத்திரர்கள் அல்ல; இந்த உண்மையை அழுத்தமாக கூறுவதன் அவசியத்தை பிற்பாடு காணலாம். சவுலின் மரணத்தின் போது தாவீது ராஜா: நீங்கள் யேகோவாவின் சுதந்தரத்தை ஆசீர்வதிக்கும் படிக்கு நான் செய்ய வேண்டிய பிராயசித்தம் என்ன? என்று கேட்டான். 2 சாமு. 21:3. சுமார் 500 வருடங்களுக்கு முன்பு யோசுவாவின் நாளில்- கி.மு. 1575 ல் கிபியோனில் குடியிருந்த சிலர் (ஏவியர் மற்றும் எமோரியர்) (Hivites & Amorites) யோசுவாவிடம் வந்தார்கள் (9:8). "**அவர்கள் யோசுவாவை நோக்கி: நாங்கள் உமக்கு அடிமைகள்**" என்றார்கள்; அதற்கு யோசுவா: நீங்கள் யார், எங்கேயிருந்து வந்தீர்கள்? என்று கேட்டான்.வசனம் 15-ல் "**யோசுவா அவர்களோடே சமாதானம் பண்ணினான்.**" வசனம் 21-ல் "**அவர்கள் சபையார் எல்லாருக்கும் விறகு வெட்டுகிறவர்களாகவும், தண்ணீர் எடுக்கிறவர்களாகவும் இருக்கக்கடவர்கள்**" என்று பிரபுக்கள் அவர்களோடே சொன்னார்கள். (PT '71, பக்கம் 37); (கிபியோனியர்களைப் பற்றி மேலும்




விவரங்கள் குறிப்பிடப்படவில்லை - அவர்கள் நிதனீமியரிடையே சேர்க்கப்பட்டார்கள்).

இந்த வேதாகம சரித்திரத்தில் இஸ்ரயேலர் அல்லாத ஜனங்கள் கர்த்தருடைய பலிபீடத்தண்டையில் ஊழியம் செய்ய அனுமதிக்கப்பட்டதை நாம் காண்கிறோம். நாம் இப்பொழுது எஸ்றா 8:20-ல் பதிவு செய்யப்பட்டபடி தாவீது ராஜாவிடம் திரும்பிச் செல்லுவோம். "**தாவீதும், பிரபுக்களும் லேவியருக்கு** (பிராகாரத்தில்) **பணிவிடைக்காரராக வைத்த நிதனீமியர்**" (பாளயத்தில்) என்று வாசிக்கிறோம். நிதனீமியர்கள் எமோரியர்களில் (கிபியோனியர்கள்) மீதியாயிருந்தவர்கள் என்று ஏற்றுக்கொள்வதற்கு சில காரணங்கள் இருக்கின்றன. அதைப் போல தான், நிதனீமியர்களும் விசேஷமாக "**லேவியருக்கு பணிவிடைக்காரராக வைக்கப்பட்டார்கள்.**" 'நிதனீம்' என்ற எபிரெய வார்த்தைக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் என்று அர்த்தம்! வசனம் 20, "**அவர்கள் எல்லாருடைய பெயர்களும் குறிக்கப்பட்டன**" என்று முடிவடைகிறது. இஸ்ரயேலரல்லாதவர்கள் என்ற கருத்தை நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். எஸ்றா 2:62, "**இவர்கள் தங்கள் வம்ச அட்டவணையைத் தேடி அதைக் காணாமற்போய், ஆசாரிய ஊழியத்திற்கு விலக்கமானவர்கள் என்று எண்ணப்பட்டார்கள்.**" எஸ்றா 8:20-ல் நாம் கண்டது போல கிபியோனியர்கள் இஸ்ரயேலர்கள்அல்ல, அதைப் போலவே நிதனீமியரும் ஆசாரியர்கள் அல்ல. ஆயினும் தேவாலயப் பணியில் அவர்களுடைய அர்ப்பணிப்பு அவர்களுடைய தரநிலையை குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்தியது. தேவன் தம்முடைய வார்த்தையில் இதற்கான ஆதாரத்தை நமக்கு கொடுத்திருக்கிறார். எஸ்றா 1:1, "**எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி, பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசுடைய முதலாம் வருஷத்திலே, கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினார்?**" இந்த வசனம் எரே. 29:10-ல் காணப்படுகிறது, "**பாபிலோனிலே எழுபது வருஷம் நிறைவேறின பின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்கு** (எருசலேமுக்கு) **திரும்பி வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**" இப்போது எஸ்றா 8:18,19-ல் எஸ்றா இதைப் பற்றி கூறுகிறார்; லேவியருடைய எண்ணிக்கை 18 மற்றும் 20 பேர்; வசனம் 20; நிதனீமியரின் எண்ணிக்கை 220 பேர். அதோடுகூட செருபாபேலுடன் வந்தவர்கள் நெகே. 7:43-ல் லேவியர்கள் 74 பேர், வசனம் 60; நிதனீமியர் 392 பேர். நிதனீமியர்கள் திரும்பி வந்து அவர்களுடைய முந்தைய பட்டணமாகிய ஒஃபேலில் தங்கி வசித்தார்கள்; அது ஆலயத்திற்கு மிக அருகிலும், அதன் பணிகளைச் செய்ய வசதியாகவும் இருந்தது.

அவர்கள் விருத்தசேதனம் செய்யப்பட்ட அந்நியர்களாகவும் பிரதிஷ்டை செய்து, ஆவியினால் பிரகாசிப்பிக்கப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் நியாயமாகவும், மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டியவர்களாகவும் இருந்தார்கள். எபிஃபெனி பயன்பாட்டில் வாலிபரான பாத்திரவான்களைப் போல நிதனீமியர் இஸ்ரயேல் சமுதாயத்தில் சுயாதீன சுதந்திரம் பெற்றவர்களாக,

ஞானமும், அறிவும் பெற்றவர்கள் மத்தியில் இருந்தார்கள். "**ஜனங்களில் மற்றவர்களாகிய ஆசாரியரும், லேவியரும், வாசல் காவலாளரும், பாடகரும், நிதனீமியரும் தேசங்களின் ஜனங் களை விட்டுப் பிரிந்து விலகி தேவனுடைய நியாயப்பிர மாணத்துக்கு திரும்பின அனைவரும், அவர்கள் மனைவிகளும், அவர்கள் குமாரரும்,அவர்கள் குமாரத்திகளுமாகிய அறிவும், புத்தியும் உள்ளவர்களெல்லாரும், தங்களுக்கு பெரியவர்க ளாகிய தங்கள் சகோதரரோடே கூடிக்கொண்டு: தேவனுடைய தாசனாகிய மோசேயைக் கொண்டு கொடுக்கப்பட்ட தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி நடந்து கொள்வோம் என்றும், எங்கள் ஆண்டவராகிய கர்த்தரின் கற்பனைகளையும், சகல நீதி நியாயங்களையும், கட்டளைகளையும் எல்லாம் கைக்கொண்டு அவைகளின்படி செய்வோம்**" என்றும் (நெகே. 10:28,29; PT'71, பக்கம் 37) ஆணையிட்டு பிரமாணம் பண்ணி-னார்கள்.

நாம் இப்பொழுது வெளி. 18:4-ல் உள்ள, "**என் ஜனங்களே, அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும் படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்**" என்ற தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிற தேவனுடைய பரோஷியா மற்றும் எபிஃபெனி ஜனங்கள் மத்தியில் உள்ளவர்களுக்கு நேராக நம்முடைய பாடத்தை நாம் குறுக்கிக் கொள்கிறோம். ஏசா. 52:11-ல் "**புறப்படுங்கள், புறப்படுங்கள், அவ்விடம் விட்டுப் போங்கள்: அசுத்தமானதைத் தொடாதிருங்கள், கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிற வர்களே,அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்.**" எரே. 51:6: "**நீங்கள் பாபிலோனின் அக்கிர மத்தில் சங்காரமாகாதபடிக்கு அதின் நடுவிலிருந்து ஓடுங்கள்... இது கர்த்தர் அதினிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது: அவர் அதற்குப் பதில் செலுத்துவார்.**"

ஆம், நாம் ஜீவிக்கிற இந்த காலத்தில், நிதனீமியர் குறைந்த எண்ணிக்கையிலான பாளயக்காரர்களை அடையாளப்படுத்துகிறார்கள். சேபா ராஜஸ்திரீ எபிஃபெனி பாளயத்தில் இருப்பவர்கள் மத்தியில் பிரிக்கப்பட்ட பிரதிஷ்டை செய்த வகுப்பாரைக் குறித்துக் காட்டுகிறாள். இவர்கள் 1954-க்குப் பின்பு, ஆனால் பரிசுத்த பெரும்பாதை திறக்கப்படு வதற்கு முன்பாக (a) பாபிலோனை விட்டு வெளியேறிய வர்களும் (b) சத்தியத்துக்குள் வந்தவர்களும் (c) தேவனுடைய ஆலயப் பணியில் உதவியாயிருந்தவர்களும் ஆவர். இந்த நிதனீமியர்களாகிய பிரதிஷ்டைசெய்த எபிஃபெனி பாளயக் காரர்களின் ஊழியத்திற்குரிய சிலக்கியம். (a) பாபிலோனை விட்டு வெளியேறி (b) சத்தியத்துக்குள் வந்து சேர்ந்த வாலிபரான பாத்திரவான்களாகிய லேவியர்களுக்கு ஊழியஞ் செய்வதாக இருக்கிறது. "பில்கிரீம்களான" (சுவிசேஷ யாத்ரீகர்களான) வாலிபரான பாத்திரவான்களும் ஆக்ஸிலியரி பில்கிரீம்களாகிய (சுவிசேஷ துணை யாத்ரீகர்களாகிய) பிரதிஷ்டை செய்த பாளயக்காரர்களுடன் அருகருகே பணிகளைச் செய்து வந்தனர். (PT'72, பக்கம் 74). "அவர்கள் அநேக விஷயங்களில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மிக அருகில் நெருங்கி வருகின்றனர். இது குறிப்பாக பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் விஷயத்தில் உண்மையாயிருக்கிறது."

கர்த்தர் பரோஷியா சத்தியத்தையும், எபிஃபெனி சத்தியத்திற்கான அடிப்படையையும் பரோஷியா தூதுவராகிய ரஸல்போதகர் மூலமாகக் கொடுத்தார். அத்துடன் அவர் எபிஃபெனி சத்தியத்தின் மேல் கட்டுமானத்தை எபிஃபெனி தூதுவரான ஜாண்சன் போதகர் மூலமாகக் கொடுத்தார். எபிஃபெனி ஆசரிப்புக் கூடார வரைபடத்தின்படி சத்திய ஜனங்களில் வித்தியாசமான அநேக வகுப்பார்கள் இருக்கின்றனர். பொதுவாக பரோஷியா சத்தியத்தையும், அதைக் கொடுப்பதில் கர்த்தருடைய பிரதிநிதியாக இருந்த ரஸல் போதகரையும் ஏற்றுக் கொள்பவர்களை சத்திய வகுப்பினர் என்று நாம் வரையறுக்கிறோம்.நிச்சயமாகவே, ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள தனிநபர்கள் பரோஷியா சத்தியத்தை ஏற்றுக் கொள்கிற அளவுக்கு, அறிவு மற்றும் புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றில் வேறுபடுகிறார்கள். எபிஃபெனி சத்தியத்திற்குள்ளாக வருவது என்பது, பொதுவாக எபிஃபெனி சத்தியத்தையும், ஜாண்சன் போதகரை அதைக் கொடுப்பதற்கு கர்த்தருடைய பிரதிநிதி என்றும் ஏற்றுக் கொள்வதை அது அர்த்தப்படுத்துகிறது. மீண்டும் முந்தின விஷயத்தில் சொன்னது போல, எபிஃபெனி சத்தியத்தை அவர்கள் ஏற்றுக் கொள்வதிலும், அறிவு, புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றிலும் வேறு படுகிறார்கள்.

இப்பொழுது கொஞ்ச காலத்திற்கு பைபிள் ஸ்டாண்டர்ட் மினஸ்டிரிஸ் Bible Standard Ministries (LHMM) என்கிறதான இந்த இயக்கம் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் பற்றிய முன்னேற்றமடைந்து வரும் சத்தியங்களை தொடர்ந்து போதித்து வருகிறது. அவர்கள் அடுத்த யுகத்தில் புது உடன்படிக்கையின் கீழ் வரும் வரைக்கும் அவர்கள் உண்மையாகவே ஜீவனைப் பெறாத போதிலும் பிரதிஷ்டையில், ஆணையோடு கூடிய உடன்-படிக்கையின் பூமிக்குரிய அம்சங்களுக்குள்ளாகத் தங்கள் குணாம்சங்களைப் பதிவு செய்ய ஆரம்பிக்கிறார்கள். நாம் இந்த யுகத்தில் ஜீவனுக்கான பரீட்சையில் இராதபோதிலும், இந்த ஜீவியத்தில் சில காரியங்களும், ஆயிர வருட யுகத்தில் சில காரியங்களும், நித்திய ஜீவனைப் பெற அவர்களை ஆயத்தம் செய்வதில் நிறைவேற்றப்படும். இந்த ஜீவியத்தில் ஆபிரகாமின் பூமிக்குரிய இரண்டாவது வித்து என்ற வகையில் உண்மையுள்ளவர்களாக நிரூபிக்கும்படி CEC வகுப்பார் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கான தங்கள் பரீட்சையில் ஜெயம்பெற வேண்டியிருக்கிறது, உண்மை-யாகவே அவர்கள் இந்த இரண்டு கிருபைகளையும் படிகமாக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கும். அதோடுகூட அவர்கள் தன்னலமற்ற அன்பை பெருமளவில் வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசியமும் இருக்கும். அது மரணபரியந்தம் பிரதிஷ்டையை உண்மையுடன் காத்துக் கொள்வதற்கு இன்றியமையாததாய் இருக்கிறது. அநேகமாக சிலர் பரீட்சிக்கப்படாத பூரணமான அன்பின் இலக்கை அடைந்து கொள்வார்கள். (PT 2002, பக்கம் 43).

பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள்,

மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களைப் போலவே,ஆணையோடு கூடிய உடன்படிக்கையின் பூமிக்குரிய அம்சங்களின் கீழ் வளர்க்கப்பட்டு வருகிறார்கள். (ஆதி. 22:16-18). இந்த ஆணையோடு கூடிய உடன்படிக் கையின் பூமிக்குரிய அம்சங்கள் அவர்களுடைய ஆவிக் குரிய தாய் என்றும்கூட அழைக்கப்படலாம். ஏனென்றால் அவர்கள் சார்ந்திருக்கிற அந்த உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை போஷிக்கிறது.




மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான் களைப் போலவே அவர்களும் தங்கள் பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்களாகவும், தெரிந்து கொள்ளப் பட்ட வகுப்பார்கள் என்று பெயரிடப்பட்ட அந்த இரண்டு வகுப்பாரைப் போலிராத போதிலும், தங்களுடைய நாமங் கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கும் என்ற எதிர்பார்ப்பு இல்லாதவர்கள் என்றும் கூட நாம் சரியாகச் சொல்ல முடியும். இந்த மூன்று வகுப்பிலுள்ள அங்கத்தினர்களும், பிரதிஷ்டைக்குப் பின்பு, தங்கள் குணாம்சங்களை ஆணை யோடு கூடிய உடன்படிக்கையின் பூமிக்குரிய அம்சங் களுக்குள்ளாகப் பதிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆயினும் அவர்கள் அடுத்த யுகத்தில் புது உடன்படிக்கையின் கீழ் வரும்வரை அவர்கள் மெய்யாகவே ஜீவனைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள்.

பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களாக, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுகிறார்கள்; அது அவர்க ளுடைய குணாதிசயங்களை வளர்ச்சியடையச் செய்து, தேவன் தம்முடைய ராஜ்யத்தில் அவர்களுக்காக ஆயத்தப் படுத்தியிருக்கிற விசேஷித்த தயவின் இடத்திற்கு அவர்க ளுடைய தகுதியை மெய்ப்பித்துக் காட்டுகிறது. ஆனால் இந்த ஜீவியத்திலும்கூட அவர்கள் அநேக ஆசீர்வாதங்களைப் பெறுகிறார்கள். ஏனெனில் தேவன் கிறிஸ்துவின் மூலமாக அவர்களைத் தமது வருங்கால குமாரர்களாக எண்ணி ஈடுபாடு செய்கிறார். அவ்வகையில் அவர் அவர்களுக்குத் தமது வசனத்தைப் பற்றிய புரிந்து கொள்ளுதலைத் தருகிறார். (1 கொரி. 2:9-12). ஐக்கியத்தில் அவர்களுடன் நெருங்கிச் சேருகிறார். (யாக். 4:8; 1 யோவா. 1:3). தம்முடைய சத்தியத்தின் மூலம் அவர்களைப் பரிசுத்தமாக்கி பாவத்தின் வல்லமை மற்றும் தப்பறையிலிருந்து அவர்களை அதிகமதிகமாக விடுவிக்கிறார். (யோவா. 17:17; 8:32), அவர்களுக்கு தம்முடைய பரிசுத்த ஆவியைக் கொடுக்கிறார். (லூக். 11:13; 1 யோவா. 3:24) மேலும் அவர்களைச் சீர்ப்படுத்தி, ஒழுங்குபடுத்துகிறார். (எபி. 12:6-11; PT 2002, பக்கம் 43). பிரதிஷ்டை செய்த பாளயக்காரர்கள் எப்படிப்பட்ட சுதந்தரத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

## நம்முடைய போதகருக்கு வாரிசு இல்லை

இந்த கட்டுரையின் மூன்றாவது பத்தியில்,"ஒரு உக்கிராணக்காரன் விசுவாச வீட்டாருக்கு ஆகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் படியாக நம்முடைய கர்த்தரால் தெரிந் தெடுக்கப்பட்ட ஒரே வாய்க்காலாக (channel) இருக்கிறார்" என்று நாங்கள் குறிப்பிட்டிருந்தோம். இந்த வாக்கியம் மத். 13:52-ல் சொல்லப்பட்டுள்ள கோட்பாட்டை அடிப்படை யாகக் கொண்டது: "**இப்படியிருக்கிறபடியால் பரலோக ராஜ்யத் துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டு தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும், பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்.**" இந்த கோட்பாட்டைப் பற்றிய தெளிவான கூற்று PT'87, பக்கம் 46-ல் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஹெட்மேன் போதகரின் புரிந்து கொள் ளுதலும் இந்தக் கருத்தின் வழியிலேயே இருந்தது. நம்முடைய போதகரைத் தவிர்த்து சபையின் பிற ஊழியக்காரர்களுக்கு கர்த்தரால் சில புதிய சத்தியம் அப்படி கொடுக்கப்படுவது நிச்சயமாகவே, நம்முடைய போதகர் தமது ஜீவிய காலத்தில் பண்டகசாலை முழுவதற்கும் விசாரணைக் காரனாயிருந்தார் என்ற உண்மைக்கு நிச்சயமாகவே இசைவற்றதாக இல்லை. அது அப்படி இல்லையென்றால், நம்முடைய போதகர்அந்த பண்டக சாலையின் விசாரனைக்காரராக இனிமேல் பொறுப்பில் இராதபோதும், வேறு சிலர் அந்த பண்டகசாலையிலிருந்து புதியதும், பழையதுமானவைகளை எடுத்துக் கொண்டு வருவது, அந்த பண்ட சாலை முன்பு நம்முடைய போதகரின் பொறுப்பில் இருந்தது என்ற சிந்தனையை மீறுவதாக இல்லை என்பதைக் குறித்து நாம் இப்போது உறுதியாக இருக்கலாம்.

இந்த பாடத்தில் கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட இந்த உருவகமானது புரிந்து கொள்ளப்படும் போது, இதை நிரூபிக்கும். இந்த உருவகம் உணர்த்துகிற விஷயம் என்னவெனில்,ஒரு குறிப்பிட்ட வீட்டெஜமான் தனது பண்டகசாலையின் மீது ஒரு உக்கிராணக்காரனுக்குப் பொறுப்பைப் கொடுத்திருந்தார். இந்த உக்கிராணக் காரனின் கீழ் பண்டக சாலையிலுள்ள பொருட்களை அந்த வீட்டாருக்கு கொடுப்பதில் பிற ஊழியக்காரர்களும் அவருடன் ஒத்துழைத்து வந்தனர். அந்த உக்கிராணக்காரன் பொருட்களை பண்டசாலையில் சேர்த்து வைக்கவில்லை. அவைகள் அவனுடைய எஜமானால் அங்கு சேர்த்து வைக்கப்பட்டிருந்தது. வழக்கமாக அவனுடைய எஜமான் அந்த வீட்டாருக்காக கொண்டு வந்து கொடுக்க வேண்டிய புதியவைகளைப் பற்றி அவனிடம் சொல்லியிருந்தார். அவனுடைய எஜமான் அவனிடம் அவை என்ன என்றும் அவை எங்கே இருக்கிறது என்றும் சொல்லும் வரை அவற்றை அறியாதிருந்தான்.

விதிவிலக்காகவும், உக்கிராணக்காரன் என்ற

வகையில் அவனை இடமாற்றம் செய்யாமல், அவனுடைய எஜமான் மற்ற உண்மையுள்ள ஊழியக்காரர்களிடம் பண்டகசாலையிலுள்ள சில புதிய பொருட்களின் தன்மை மற்றும் இருப்பிடத்தைக் கூறி அவைகளை வெளியே கொண்டு வந்து அவற்றை அந்த உக்கிராணக்காரனிடம் காட்டவும் சொல்லியிருப்பார். அதன்பின்பு அவன் அவைகளை அந்த வீட்டாருக்கு கொடுக்க ஏற்பாடு செய்தி–ருப்பான். ஆனால் அந்த வீட்டாரின் உக்கிராணக்காரன் மரித்த போது அந்த உக்கிராணக்காரன் அந்த பண்டக சாலையின் பொறுப்பாளியாக முன்பு இருந்த காரணத்தால், அந்த வீட்டெஜமான் அதினிமித்தம் தன்வீட்டார் இதுவரை பயன்படுத்தாமல் வைத்திருந்த பண்டகசாலையில் உள்ள பிற புதிய பொருட்களால் போஷிக்கப்படுவதிலிருந்து விலக்குவதில்லை. இல்லை, அதற்கு மாறாக, அவன் இன்னொரு உக்கிராணக்காரனை நியமித்திருக்கக் கூடாது என்ற போதிலும், அவன் அப்படிப்பட்ட புதியவைகளை, தன் குடும்பத்தார் புசிக்க வேண்டுமென்று அவன் விரும்பியது போலவே அவற்றைக் கொண்டு வருவதற்கு, அவன் சிலரைப் பயன்படுத்தியிருக்கலாம். அவ்வாறே நம்முடைய கர்த்தரும் தம்முடைய விசேஷமான உக்கிராணக்காரன் மரித்து அவருடைய உக்கிராணக் காரனாய் இருப்பது முடிவுற்றதிலிருந்து, அதற்கு முன்னரும், அப்பொழு திருந்தும் செய்து கொண்டிருக்கிறார். இது, நம்முடைய போதகர் அந்த பண்டகசாலையின் மீது அதிகாரம் பெற்றி ருக்கிறார் என்ற உண்மையின் அடிப்படையிலான சந்தேகவாதம் பரிசீலனையின் கீழ் இருந்ததைப் பொய் யாக்குகிறது.

நம்முடைய போதகர் அந்த பண்டக சாலையின் மீது பெற்றிருந்த அதிகாரத்தைக் குறித்த அர்த்தத்தையும் உட்பொருளையும் பற்றி தவறாக நினைக்கிற சகோதரர்கள் அவருடைய உத்தியோகப் பணிகளைப் பற்றி புரிந்து கொள்வதில்லை. அவர் பரோஷியா சத்தியத்தைக் கொடுத் தல் மற்றும் பரோஷியா வேலையை மேற்பார்வை செய்தல் ஆகிய பரோஷியா நோக்கங்களுக்காக, பண்டசாலை மற்றும் விசுவாச வீட்டார் மீது கர்த்தரால் நியமிக்கப்பட்ட பரோஷியா தூதுவராவார். அவர் சபைக்கு, பரோஷியா சத்தியம் முழுவதையும் கொடுத்து, சபை முழுவதுமாக கூட்டிச் சேர்த்ததை மேற்பார்வையிட்டார். (எனவே அவருக்கு வாரிசு இருக்க முடியாது). இவ்வாறாக எபிஃபெனி சத்தியம் மற்றும் எபிஃபெனி வேலைக்கான அஸ்திபாரத்தைக் கொடுத்தார்; ஏனெனில் பரோஷியா சத்தியம் மற்றும் பரோஷியா வேலை, எபிஃபெனி சத்தியம் மற்றும் எபிஃபெனி வேலைக்கான அஸ்திபாரமாய் இருக்கின்றன.


ஆனால் நம் போதருடைய வேலை திரள்கூட்டத்தார் மற்றும் வாலிபரான பாத்திரவான்களை கூட்டிச் சேர்ப்பதாக இருக்கவில்லை என்பதால், இந்த விஷயங்கள் பற்றி அவர் கொடுத்த சத்தியங்கள் இந்த தனிநபர்களை அந்த வகுப்புக்கு கூட்டிச் சேர்க்கும் வேலைக்கு போதுமான அளவு நிறைவானதாக இருக்கவில்லை. அப்படிப்பட்ட வகுப்புக்கு அவர்களைக் கூட்டிச் சேர்த்தல் எபிஃபெனி வேலையா யிருக்கிறது. அதற்கு அவருடைய நாளில் காண முடியாத விசேஷமான எபிஃபெனி சத்தியங்களும்கூட தேவைப் பட்டன. ஆகையால் "புதியவைகளும், பழையவைகளு மானவைகள்" எபிஃபெனி வேலைக்கு அவசியமாய் இருக்கின்றன.

பண்டக சாலையின் மீது அவர் தனக்கு இருந்த உக்கிராணப் பொறுப்பை விட்டுவிட்ட பின்பும், அதிகமான வெளிச்சம் வருமென அவர் எதிர்பார்த்ததை இந்த உண்மைகள் நிரூபிக்கின்றன. இவ்வாறாக, வேதாகமம், நம் போதகருடைய போதனைகள், உண்மை செய்திகள், மற்றும் பகுத்தறிவு இவைகளெல்லாம் நம்முடைய போதகரின் மரணத்திற்கு பிறகும்கூட வெளிச்சம் அபிவிருத்தியடைந்தது என்பதை நிரூபிக்கின்றன. ஆகவே முழு பண்டக சாலைக் கும் அவரே பொறுப்பதிகாரத்தைப் பெற்றிருந்தார் என்பதால் முதலாவதாக புதிய வெளிச்சம் எதுவும் இன்னொருவர் மூலமாக வரமுடியாது என்றும் அவருடைய மரணத்திற்குப் பின்பு ஒருவரும் அப்படியாக எதிர்பார்க்க முடியாது என்றும் போதிக்கிறவர்கள் தப்பறையில் இருக்கிறார்கள். தேவன் பிரதிஷ்டை செய்த தம்முடைய ஜனங்களை இருளில் விட்டுவிடவில்லை; மாறாக அவர் அவர்களை இருளிலிருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத் திருக்கிறார். ரஸல் போதகருடைய வார்த்தைகளிலிருந்து, எடுத்துக்காட்டாக, நோவாவின் நாளில் ஜலப்பிரளயம் வருகிறது என்பது அப்போதைய சத்தியமாக இருந்ததுடன் அக்காலத்தில் இந்த வெளிச்சத்தில் நடப்பவர்கள் எல்லோருக்கும் இந்த விசுவாசம் அவசியமான ஒன்றாக இருந்தது. அதே சமயத்தில் ஆதாமும், மற்றவர்களும் அதைக் குறித்து ஒன்றும் அறிந்திருக்கவில்லை. ஜலப் பிரளயம் வருகிறது என்று இப்பொழுது பிரசங்கம் செய்வது சத்தியத்தைப் பிரசங்கிப்பது ஆகாது. ஆனால் பிற யுகங்களுக்கடுத்த சத்தியங்கள் தொடர்ந்தேர்ச்சியாக ஏற்ற காலத்துக்கு இசைவானதாக வருகிறது. அந்த விளக்கின் வெளிச்சத்தில் நாம் நடந்து செல்வோமானால் அதை அறிந்து கொள்வோம். ஆகவே பல நூற்றாண்டு காலங் களுக்கு முன்பு ஏற்றதாயிருந்த சத்திய வெளிச்சங் களையெல்லாம், அதாவது, அதை மட்டுமே நாம் பெற்றிருப்போமானால், நாம் குறிப்பிடத்தக்க அளவில் இருளிலேயே இருக்கிறோம். (P.Vol.1, பக்கம் 24).

நம்முடைய போதகரிடமிருந்து இன்னொரு இரத்தினம்: தேவனுடைய செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளுதல் குறைவான முக்கியத்துவம் கொண்டது என்றும், கிறிஸ்தவ குணாதி சயத்தின் கிருபைகளையே தேவன் அவசியமாகக் கருதுகிறார் – என்றும் எண்ணிக்கொண்டு அநேகர் கொடிய தப்பறையில் விழுகிறார்கள். வேதவாக்கியங்கள் எவ்வளவு வித்தியாசமாக இந்த கருத்தை எடுத்துரைக்கிறது! அவைகள் கிறிஸ்தவ குணாதிசயக் கிருபைகளை வளர்த்துக் கொள் வதை மட்டுமல்லாது நாம் சத்தியத்தை பகுத்தறிந்து கொள் வதற்கு ஏதுவாக்குகிற, இருதயத்தின் நிலைமையையும், மிக முக்கியமாக ஏற்ற காலத்தில் கர்த்தருடைய பிரசன்னம் மற்றும் யுக மாற்றங்கள் நேரிடும் காலம் பற்றிய சத்தியத்தையும் தொடர்ந்தேர்ச்சியாக காத்துக்கொள்ளவும்

ஆலோசனை கூறுகின்றன. யுகங்களுக்கடுத்த சத்தியத்தை பற்றிய அறிவு, யூதயுகத்தின் முடிவில் இருந்தது போலவே இந்த யுகத்தின் முடிவிலும் முக்கியமானதாய் இருக்கிறது. அப்போது ஏற்ற கால சத்தியத்தைப் பகுத்தறியாதவர்கள், ஏற்றகால அனுகூலமான தயவுகளையும் பெற்றுக் கொள்ளவில்லை. அப்படியே இந்த யுகத்தின் முடிவிலும் இப்போது ஏற்ற காலத்துக்குரிய சத்தியத்தை பகுத்தறிந்து கொள்ள முடியாதவர்கள் அவிசுவாசம் மற்றும் உலகத் தனத்தால் கண்கள் குருடாக்கப் பட்டவர்களாகி, இப்போது ஏற்ற காலத்துக்குரிய விசேஷமான தயவுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. (P.Vol.2, பக்கம் 28) ஆக்கப்பூர்வமான முன்னேற்றமடைந்துவரும் சத்தியம்!

## நம் போதகருடைய வேலை நிலைத்திருக்குமா?


சார்லஸ் தேஸ் ரஸல் போதகர்

நிச்சயமாகவே! அவருடைய மரணத்திலிருந்து சுமார் 105 வருடகாலப் பகுதியின் போதும் அதிக பெரும்பான்மையான சத்திய ஜனங்கள் மத்தியில், போதனைகள் மற்றும் நடைமுறைகளின் போக்கு - அவருடைய வேலையை கைவிட்டு விடுகிற போக்கிலும், அவர் நிறைவேற்றியவைகளை பயனற்றுப் போகச் செய்கிறதாகவும் இருக்கிறது என்பதை நாம் ஒத்துக் கொள்ளத் தான் வேண்டியிருக்கிறது. இந்த போக்கு நிறைவேறாது என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்; ஆனால் சந்தேகமின்றி கடந்த 105 வருடங்களாக, சத்திய ஜனங்கள் மத்தியில் ஏற்பட்ட மிகப்பெரும் அளவிலான, பலதரப்பட்ட கலகங்களின் வெளிச்சத்தில் சந்தேகமின்றி மானிட பகுத்தறிவின்படி சொல்லக்கூடிய கருத்து, நம்முடைய போதகரின் வேலை நிலைத்து நிற்காது என்பதாகும்.

கடந்து போன இந்த 105 வருடங்களின் போது, அவருடைய போதனைகள் மற்றும் நடைமுறைகளுக்கு எதிராக கலகம் செய்வதில் அப்படிப்பட்ட குறிப்பிடத்தக்க வெளிப்படையான வெற்றியுடன் செயல்புரிந்த சக்திகள் இன்னும் சில வருடங்கள் கூட தொடர்ந்து செயல்பட்டிருந்தால் மனுஷீக நிலையிலிருந்து பேசுவதாக இருந்தால், எந்த மனித சக்தியும், சத்திய ஜனங்கள் என்று தங்களை சொல்லிக் கொள்ளுகிற மிகப் பெரும்பான்மையானவர்கள் நம்முடைய போதகருடைய வேலைக்கு இனிமேல் எந்த தொடர்பும் அவர்களுக்கு அளிக்காத அப்படிப்பட்ட நிலைக்கு தங்களுடைய உபதேசங்களிலும், நடைமுறைகளிலும் வழிதப்பிப் போவதிலிருந்து தடுத்திட முடியாது என்றாலும் தேவனுக்கு பிரதிஷ்டை செய்திருக்கிற பிள்ளைகளே அன்பான சகோதரர்களே, தேவனுடைய அபிஷேகம் பெற்ற ஊழியக்காரன் மூலமாக சத்திய வீட்டாரிடமிருந்து கொண்டு வரப்பட்ட சத்தியங்களை இந்த 105 வருடங்களுக்கு மேலாக அநேகர் அசுத்தப்படுத்த தொடர்ச்சியாக விருப்பம் கொண்டிருந்த போதிலும், ஏற்ற சமயத்தில் அவருடைய உபதேசங்கள், லேவியருடைய தப்பறைகளை முழுமையாக அழித்துப் போடும் அக்கினியிலிருந்து சிறிய அளவிலும் தீங்கு இல்லாமல் வெளிப்படும், கர்த்தருடைய வேலையைச் செய்கிற அவருடைய வழிமுறைகள் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டு, சத்திய வேலை செய்வதில் லேவியருடைய கலகமுண்டாக்கும் முறைகளை அக்கினி சுட்டெரித்துப் போட்ட பிறகு, வெற்றிகரமாக கர்த்தருடைய திட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்லும்.

ஆம், தற்காலிகமாக அது தீங்கநுபவித்தது; மேலும் தொடர்ந்து பகுதியளவு - சூரிய கிரகணம் போல தீங்கநுபவிக்கும் - அது இன்னும் கொஞ்ச காலத்திற்கு முழு சூரிய கிரகணம் போலவும் தீங்கநுபவிக்கலாம் - ஆனால் ஏற்றகால சத்தியம் வல்லமையுள்ளதாகவும், முடிவில் நிலைத்திருப்பதும் நிச்சயமாயிருப்பது போலவே யேகோவா தேவன் நிறைவேறுதலான எலியேசருக்கு (நம்முடைய போதகர்) செய்யும்படி கொடுத்த வேலை (எண். 3:32; 4:16) முழுவதுமாக, மீண்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிலைத்திருப்பது நிச்சயம். தேவனுடைய செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் பற்றிய அறிவு மிகக் குறைவான மதிப்புள்ளது என்று எண்ணுகிற கொடிய தவறு இருந்தது; மேலும் அது தொடர்ந்து இருக்கும். அதை அநேகர் ஏற்றுக் கொள்கின்றனர், மேலும் அதில் இன்னும் விழுகின்றனர். பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளை, கிறிஸ்தவ குணாதிசயக் கிருபைகளை மட்டும் வளர்த்துக் கொள்வது மட்டுமல்லாமல் சத்தியத்தைப் பகுத்தறிந்து கொள்ள ஏதுவாக்குகிற இருதயத்தின் நிலைமையையும் மிக முக்கியமாக, ஏற்ற காலத்தில் கர்த்தருடைய பிரசன்னம் மற்றும் யுக மாறுதல்கள் நேரிடும் காலம் பற்றிய சத்தியத்தையும் தொடர்ச்சியாக காத்துக் கொள்ளவேண்டும். எனவே இந்த யுகத்தின் முடிவில், இப்போது ஏற்ற காலத்துக்குரியதாயிருக்கிற சத்தியத்தைப் பகுத்தறிந்து கொள்ள முடியாதவர்கள், அவிசுவாசம் மற்றும் உலகத் தனத்தால் குருடாக்கப்பட்டவர்களாய் இப்போது ஏற்ற காலத்துக்குரிய விசேஷமான தயவுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது.

கடைசியாக அழைக்கப்பட்ட வகுப்பார் என்ற வகையில், ஆயிர வருடத்துக்கு முந்தின ஆபிரகாமின் வித்து, எபிஃபெனியால் பிரகாசிப்பிக்கப்பட்ட பரிசுத்த வான்கள் (hagios) அர்ப்பணிக்கப்பட்ட, பிரதிஷ்டை செய்த திரும்பக் கொடுத்தலுக்கு முந்தின தேவனுடைய பிள்ளைகளாக, பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்களாக ஆவியினால் பிரகாசிப்பிக்கப்பட்டவர்களாக, ஆவியினால் ஆற்றல் அளிக்கப்பட்டவர்களாக, ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத பிரதிஷ்டை செய்தவர்களாக, இந்த யுகத்தின், இறுதியான முடிவில், அடிப்படையான சத்தியங்களை உறுதியாகப் பற்றிக் கொள்ளும் கடமை மற்றும் சிலாக்கியத்துடன், ஏற்ற கால சத்தியத்தை உண்மையுள்ளவர்களுக்கு கொண்டு வந்து கொடுக்கின்றனர். ஒரே ஒரு சத்தியம் மட்டுமே இருக்கிறது. மற்றவர்களுடைய உதவியுடன்,

ரஸல் போதகர் அடிப்படை சத்தியத்தைக் கொடுத்தார், அது கொடுக்கப்பட்ட போது இருந்தது போலவே இன்றைக்கும் உண்மையாயிருக்கிறது! ஆயினும் அந்த ஊழியக்கார னுடைய மரணத்துடன் ஏற்ற கால சத்தியத்தைக் கொடுப்பதை யேகோவா தேவன் நிறுத்திவிடவில்லை. ஜான்சன் போதகர், ஜாலிபோதகர், கோல்கி போதகர், ஹெட்மேன் போதகர் (நிறைவேறுதலான யோபுவின் ஏழு விசேஷமான உதவியாளர்களில் கடைசியானவர்), ஹெர்ஸிக் போதகர் ஆகியோர் மூலமாகவும் கொடுத்து வந்தார். மேலும் ஏப்ரல். 5, 2016-ல் அவருடைய மரணத்தி லிருந்து,தேவன் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக் காரரான சகோ. லியான் ஸ்னைடர் அவர்களை, ரஸல் போதகர் மூலமாக கொடுக்கப்பட்ட அடிப்படை உபதேசங் களை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளும் நிலையிலும், ஏற்றகால சத்தியங்களைக் கொடுப்பதிலுமான ஊழியத்திலும் வைத்துள்ளார்.

## நிகழ்கால சத்தியம் மேலும் திறக்கப்படுதல்

இந்த கேள்வி ஜாலி போதகரிடம் கேட்கப்பட்டது: உங்களுடைய மரணத்திற்குப் பின்பு, புது உடன்படிக்கையின் கீழ் ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதி ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு, "ஏற்ற காலத்துக்குரிய ஆகாரமாக" நிகழ்கால சத்தியம் மேலும் திறந்து கொடுக்கப்படுமென்று நாம் எதிர்பார்க்கலாமா? அதற்கு அவருடைய பதில்: கர்த்தருடைய செம்மறி ஆடுகள் தொடர்ந்து அவருடைய மேய்ப்பனுக்குரிய பராமரிப்பின் கீழ் இருக்கின்றன. அவர் அவர்களை ஒருபோதும் கைவிடுவதுமில்லை, விட்டு விலகுவதுமில்லை, "**நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிக மாய்ப் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போலிருக்கும்.**" (நீதி. 4:18). நான் இந்த வசனத்தை அனுபவித்து மகிழ்கிறேன். தெய்வீக திட்டம் மாற்றப்படவில்லை, ஆனால் அதைக்குறித்து அதிகத் தெளிவான வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

உபாகமம் 29:29-ல், "**மறைவானவைகள் நம்மு டைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள், வெளிப் படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தை–களின்படியெல்லாம் செய்யும்படிக்கு நமக்கும், நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்**" என்று நாம் வாசிக்கிறோம். "**பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும், வேளைகளையும்**" அறிவது நமக்குரியதல்ல என்று கர்த்தராகிய இயேசு சொன்ன போது (அப். 1:7), இந்த கோட்பாடு நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மூலமாகவும் தெளிவாக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.

அருமை சகோதரர்களே, தேவன் வெளிப்படுத்த பிரியப்படாத காரியங்களுக்குள்ளே எல்லை கடந்து பார்ப்பதையும், "அறிய முடியாததை உற்றுப் பார்ப்பதையும்" குறித்து எச்சரிக்கையாயிருங்கள். யாரெல்லாம் ஊகம் செய்கிறார்களோ, அவர்கள் தேவனால் விலக்கப்பட்ட காரியத்தைச் செய்கிறார்கள்." (யாத். 19:21-25; E.Vol.9, பக்கம் 126). "**மாறுபாடுள்ளவன்** (சொற்கேளாதவன்)




**கர்த்தருக்கு அருவருப்பானவன்: நீதிமான்களோடே அவருடைய இரகசியம் இருக்கிறது.**" (நீதி. 3:32); மேலும் ரஸல் போதகர் ஞானமாய் சொல்லியிருப்பது போல (R 4008, பத்தி 6): "ஒவ்வொருவரும் வேதவாக்கியங்களில் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் சொல்லப்படாத எந்த உபதேசத்தையும் அல்லது விஷயத்தையும் அறிவிப்பதில் கவனத்துடன் கையாளும் அல்லது வெளிப்படுத்த மறுக்கும் உணர்வைப் பெற்றிருக்க வேண்டும், எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவன் அதைக்குறித்து தானே முழுவதுமாக உறுதியாக நம்பாமல் இருப்பானானால், ஊகங்களை ஒருபோதும் உபதேசிக்–கவோ அல்லது உபதேசிக்க முயற்சிக்கவோ கூடாது என்பதில் உறுதியாயிருக்க வேண்டும். தாங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளாதது என்று ஒப்புக்கொண்ட விஷயங்களை மறுபடியும் ஒப்புவிப்பதால் மற்றவர்கள் அவனுடைய கஷ்டங்களை அதிகப் படுத்தாமலேயே, ஒவ்வொருவனும் தன்னுடையசொந்த அபூரணமான நிதானிப்பினிமித்தம் போராடுவதற்குப் போதுமான திரித்தல்களையும் முறுக்கு களையும் பெற்றிருக்கிறான். தேவனுடைய வார்த்தையில் ஏராளமானவை தெளிவாகவும், எளிமையாகவும், நாம் பேசுவதற்கும், சிந்திப்பதற்கும் நன்கு உறுதிப்பட்டதாகவும் இருப்பதால் தூரமான யூகங்களுக்காக மன்னிக்கப்பட முடியாத நிலைக்கு நெருங்கி இருக்கிறோம். (PT '76, பக்கம் 53).

நாம் கற்றுக் கொள்ள வேண்டிய வரலாறு சார்ந்ததும் மற்றும் நிறைவேறுதல் சார்ந்ததான பாடங் களையும், அவைகளால் பலன் அடைவதற்கு நமக்குத் தேவையான எல்லாவற்றையும் நிச்சயமாகவே தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றுவதில் வரம்புக்குட்பட்ட நம்முடைய மனங்களை நமக்கு பயன் தரக்கூடாத விளக்கங்களால் அவர் பார மடையச் செய்கிறதில்லை. அற்புதமாய் நேசிக்கிறவரும் சர்வஞானமுள்ளவருமான எப்பேற்பட்ட பரமபிதா நமக்கிருக் கிறார், நாம் அவருக்கு நெருக்கமாக நடந்து கவனத்துடன் அவரில் இளைப்பாறி அவருடைய போதனை யையும் வழிநடத்துதலையும் முழுமையாக நம்பியிருப் போமாக.

## ஏற்ற கால சத்தியம் பிரதிஷ்டை செய்த எல்லாருக்குமுரியது என்று வேத வாக்கியங்கள் எல்லா காலங்களிலும் போதிக்கின்றன

கோல்கி போதகர் இந்த விஷயத்தைக் குறித்து PT 1984, பக்கம் 22-ல் "JW" தலைவர்கள் உட்பட சிலர், யேகோவா தேவனுடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத பிரதிஷ்டை செய்த ஊழியக்காரர்கள் "யுகங்களுக்கிடையே பிரதிஷ்டை செய்கிறவர்கள்" தேவனுடைய பரிசுத்த ஆவியை அவருடைய வல்லமை என்ற வகையில் ஓரளவுக்கு பெற்றிருக்கிற வேளையில், அவர்கள் பரிசுத்த ஆவியை, இருதயம், மனம், சித்தம் ஆகியவற்றில் தேவனுடைய குணாதிசயம் மற்றும் பரிசுத்தாவியின் சாட்சி என்ற வகையிலும் கூட பெற்றிருக்கவில்லை என்ற கருத்தை பதிவு செய்திருக்கிறார்கள். (ரோம. 8:16) என்று எழுதியுள்ளார். இது ஒரு அபாயமான தவறாயிருக்கிறது! ஆவியினால் ஜெநிப்பித்தல் என்ற கருத்தில் பரிசுத்த ஆவியைப் பெறவில்லை என்ற போதிலும் அவர்கள் மூப்பரான பாத்திரவான்களைப் போல இருதயத்திலும், மனதிலும், சித்தத்திலும் ஆவியினால் பிரகாசிக்கப்படுதல், மன மகிழ்ச்சி மற்றும் ஆற்றலளிக்கப்படுதல் என்ற கருத்தில் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கின்றனர் என்பதற்கு தெளிவான ஆதாரம் இருக்கிறது. உதாரணமாக தாவீதின் விஷயத்தில், "**உமது பரிசுத்தாவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்**" என்று யேகோவா தேவனிடம் அவர் ஜெபித்தார். (சங். 51:11).

ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத இந்த பிரதிஷ்டை செய்தவர்கள் பரிசுத்தாவியின் சாட்சியை அதன் எல்லா விதமான ஏழு தன்மைகளிலும் நடைமுறையில் பெற்றிருக்கின்றனர். இந்த ஏழு தன்மைகளும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன: (1) தேவனுடைய வார்த்தையின் ஆழமான காரியங்களை மதிப்புணர்ந்து பாராட்டக்கூடிய புரிந்து கொள்ளுதல், (2) பரத்துக்குரிய உயர்ந்த லட்சிய வாஞ்சைகள், (3) ஊழியத்திற்கான சந்தர்ப்பங்கள் (4) கிறிஸ்துவின் சாயலில் வளருதல் (5) கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நீதியினிமித்தம் பாடனுபவித்தல் (6) தவறுகளுக்காக சிட்சைகளைப் பெறுதல் மற்றும் (7) தவறு செய்யவைக்கும் சோதனைகள் மத்தியிலும் குணாம்சத்திற்கான பரீட்சைகள் ஆகியவை.

யேகோவா தேவனுடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத, அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஊழியக்காரர்கள் மூப்பரான பாத்திரவான்களுக்கு கொடுக்கப்பட்டதைப் போன்றதொரு ஆவியின் சாட்சியைப் பெறுகிறார்கள். ஆகையால் ஆவியின் சாட்சியில் உள்ள ஏழு அம்சங்களில் குமாரர்களுக்கு கொடுக்கப்பட்டது ஏதுவானாலும் அது சிநேகிதர்கள், ஊழியக்காரர்கள் மற்றும் தேவனுடைய பிள்ளைகள் என்ற எதிர்பார்க்கப்படுபவர்களுக்கும் பொருந்துகிறது. (ரோம. 8:16). அது அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. எனவே மூப்பரான பாத்திரவான்கள் தங்கள் நாட்களில் எல்லா சத்தியத்தையும் பெற்றிருந்தது போலவே, இந்த பிரதிஷ்டை செய்த ஊழியக்காரர்களும் நம்முடைய நாளில் ஏற்ற காலத்துக்குரியதாக இருக்கிற பெரும்பாலான சத்திய காரியங்களைப் பெறுகிறார்கள். நிச்சயமாகவே அது மிகப் பரந்த அளவில் அதிகமானதாக இருக்கிறது. ஆகவே ஏற்றகால சத்தியம் அவருடைய விசேஷமான ஊழியக்காரர்களுக்கு கொடுக்கப்படுகிறது போலவே, இப்பொழுது அவர்களும் யேகோவா தேவனுக்கு உத்தமமாயிருப்பதற்குத் தக்கதாக இப்பொழுது ஏற்ற கால சத்தியமாயிருக்கிற எல்லாவற்றையும் பெற்றுக் கொள்வது அவர்களுக்குரிய சிலாக்கியமாயிருக்கிறது. அனுபவ காரியங்கள், இது உண்மையென்று காட்டுகிறது.

ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாதிருப்பதால், இந்த பிரதிஷ்டை செய்த ஊழியக்காரர்கள் தேவனுடைய வார்த்தையின் ஆழமான காரியங்களை பார்க்க முடியாது என்று சிலர் மறுப்பு கூறுகின்றனர். ஏற்றகால சத்தியம் பிரதிஷ்டை செய்திருக்கிற எல்லோருக்கும் உண்டு என்று வேதவாக்கியங்கள் எல்லா காலத்திலும் போதிக்கிறது என்று நாங்கள் இதற்கு பதிலளிக்கிறோம், எனவே பழைய ஏற்பாட்டு காலங்களில், மூப்பரான பாத்திரவான்கள் தங்கள் காலத்திற்கு ஏற்றதாயிருந்த எல்லா சத்தியங்களையும் பெற்றுக் கொண்டார்கள். கிறிஸ்துவின் மத்தியஸ்த ஆட்சியில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் இல்லாமலே பாத்திரவான்களும், இழந்து போனதைத் திரும்ப பெறும் வகுப்பாரும் முடிவாக வேதாகமத்தில் உள்ள சகலத்தையும் அறிந்து கொள்வார்கள். ஏசா. 11:9: "**என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல்,பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்**; ஏசா. 29:18: "**அக்காலத்திலே செவிடர் புஸ்தகத்தின் வசனங்களைக் கேட்பார்கள், குருடரின் கண்கள் இருளுக்கும், அந்தகாரத்துக்கும் நீங்கலாகி பார்வையடையும்:**" ஏசா. 29:24: "**வழுவிப் போகிற மனதை உடையவர்கள் புத்திமான்களாகி, முறுமுறுக்கிறவர்கள் உபதேசம் கற்றுக் கொள்ளுவார்கள்:**" ஏசா. 35:5: "**அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டு போம்:**" எரே. 31:34: "**இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்து கொள் என்று போதிப்பதில்லை, அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்**" ஏன்? ஏனென்றால், பிரதிஷ்டை செய்தவர்கள் தங்கள் காலத்துக்கு ஏற்ற சத்தியத்தை ஏற்ற சமயங்களில் கண்டு கொள்வது எப்பொழுதுமே அவர்களுடைய சிலாக்கியமாயிருக்கிறது.

## நம்முடைய கர்த்தரின் மேய்ப்பனுக்குரிய பராமரிப்பு

திரள்கூட்டத்தார் தங்கள் பூமிக்குரிய ஓட்டத்தை முடித்துக்கொண்ட பிறகு, நம்முடைய கர்த்தர் தமது ஜனங்களுக்கான மேய்ப்பனுக்குரிய விசேஷமான பராமரிப்பை வாலிபரான பாத்திரவான்கள் மூலமாக தொடர்ந்து

கொடுத்து வந்தார். கர்த்தருடைய ஜனங்களின் கடைசி வாலிபரான பாத்திரவானாகிய தலைவர் (ரால்ப் ஹெர்ஸிக் போதகர்), இந்த ஜீவியத்திற்கான தன்னுடைய ஓட்டத்தை முடித்த பிறகு, தேவன் தம்முடைய மேய்ப்பனுக்குரிய பராமரிப்பை பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் மூலமாக தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்.

ஆனால் சபையின் ஏழு காலகட்டத்துக்குரிய ஏழு கூட்டிணைவான தூதுவர்களாகிய, ஏழு கூட்டிணைவான நட்சத்திரங்கள் அல்லது ஏழு மேய்ப்பர்கள் தங்கள் எட்டு அதிபதிகளான மனுஷருடன் (மீகா. 5:5; பரோஷியா மற்றும் எபிஃபெனி தூதுவர்கள் ஏழாவது மற்றும் எட்டாவது அதிபதிகள்) தங்கள் ஓட்டத்தை முடித்து விட்டபடியால், நம்முடைய நல்ல மேய்ப்பராகிய அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியானவர், புத்தகத்தின் முத்திரைகளைத் தொடர்ந்து திறந்து (வெளி. 5:5) தம்முடைய மந்தைக்கு ஏற்ற கால சத்தியத்தை எப்படி கொடுத்து வருகிறார்? வேதவாக்கியம், காரண காரியங்கள் மற்றும் நிகழ்வு உண்மைகள் ஆகிய பல்வேறு எண்ணிக்கையிலான ஆதாரங்களின் வரிசைக ளில், எபிஃபெனி தூதுவராகிய 49 ஆவது மற்றும் கடைசி நட்சத்திர அங்கத்தினர் மற்றும் கடைசி சிறுமந்தை அங்கத்தினர் மகிமைப்பட வேண்டியதும், (E.Vol.10, பக்கம் 142), அவருடைய மரணத்துக்குப்பின்பு நம்முடைய கர்த்தர் சத்தியத்தின் உக்கிராணப் பொறுப்பை திரள் கூட்டத்தாரிடம், குறிப்பாக நல்ல லேவியர்களிடமும் தேவனால் நியமனம் பெற்ற அவர்களுடைய தலைவரிட மாகவும் (அவருடைய மரணம் வரை எபிஃபெனி தூதுவரின் தோழனும், விசேஷமான உதவியாளருமாக இருந்தவர்" - PT '42, பக்கம் 14,15; PT '43, பக்கம் 79) கொடுப்பார் என்பதைக் காட்டுகிறது. மேலும் "திரள் கூட்டத்தார் ஒரு நட்சத்திர அங்கத்தினரிடமிருந்து நேரடியான ஊழியத்தைப் பெறாமல் தங்களுக்கு ஊழியஞ் செய்ய வேண்டியதிருந்தது. (PT '44, பக்கம் 29, பத்தி 1; PT '48, பக்கம் 45; PT '50, பக்கம் 192, 193; PT '52, பக்கம் 83-91; PT '60, பக்கம் 50-63; PT '69, பக்கம் 41-43 பார்க்கவும்).

ஜாண்சன் போதகர் PT '35, பக்கம் 87-ல் எழுதிய இந்த குறிப்புகளால் நாம் உற்சாகப்படுத்தப்படுகிறோம். "ஏற்கனவே பெற்றிருந்த சத்தியத்தின் மீது கர்த்தர் அதிகமான சத்தியத்தை கற்பனையின் மேல் கற்பனையும், பிரமாணத்தின் மேல் பிரமாணமுமாக, ஒன்றின்மேல் ஒன்றாக கூட்டி வழங்கினார்," (ஏசா. 28:10,13). காலத்துக்கு ஏற்ற சத்தியம் தேவனுடைய ஜனங்களிடம் அவர்களுடைய பல்வேறான பரிபாலனத் தேவைகள், சூழ்நிலைகள் மற்றும் அனுபவங்களுக்கு ஏற்ப வந்து சேர்ந்தது; ஏனெனில் தேவனுடைய வார்த்தை தேவனுடைய ஜனங்களின் பொது வான தேவைகளுக்கு மட்டும் ஏற்றதாக அல்லாமல் அவர்களுடைய பல்வேறான சூழ்நிலைகள் மற்றும் அனுப வங்களின் மத்தியில் அவர்களுடைய தனிப்பட்ட தேவைக ளுக்கும் ஏற்றதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தது: இது தேவனுடைய மற்றும் தேவனுடைய சத்தியத்தின் நடை முறைத் தன்மையைத் தெரியப்படுத்துகிறது.

அருமை சகோதரர்களே, இந்த இயக்கம், ஜாலி போதகருடைய மரணத்துக்குப் பிறகு, வாலிபரான பாத்திர வான்களின் பொறுப்பில் அதே அடிப்படையில் தொடர்ந்து இயங்கி வந்தது. வாலிபரான பாத்திரவான்கள் எல்லாரும் இந்த ஜீவியத்தில் தங்கள் ஓட்டத்தை முடித்து விட்ட பிறகு, தேவனுக்கு சித்தமானால், அதே பொதுவான ஒழுங்கு முறையானது தொடரும் என்று நாங்கள் நம்புகிறோம். ஜாலி போதகரிடமிருந்து மேலும் சில குறிப்புகள்: "அவருடைய வாலிபரான பாத்திரவான்களான உதவியாளர்கள், அவரது மரணத்துக்குப் பிறகு, இறுதியாக எபிஃபெனி ஆலயத்தின் வெளிப்புற பிரகாரத்தைப் பூர்த்தி செய்கிற வேலையைச் செய்வார்கள், அவருடைய உதவியாளர்களான - வாலிபரான பாத்திரவான்கள், பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் மற்றும் பிற உதவியாளர்கள் - அவருடைய மரணத்துக்குப் பின்பு, எபிஃபெனி பாளயத்தை கட்டுகிற வேலை முடிவடையும் வரை, அவருடைய அறிவு றுத்தல் மற்றும் வழிகாட்டுதலின்படியே செய்து முடிப்பார்கள், அது புது உடன்படிக்கை தொடங்கும் போது, அதன் கீழ் அது ஆயிர வருட பாளயத்துக்குள்ளாக ஒன்றிணையும். ஓ, நம் கர்த்தர் தம்முடைய ஜனங்களை, அவர்களுக்கு உதவி செய்வதற்கு விசேஷமான ஜாமக்காரன் இல்லாமல் விட்டுவிடமாட்டார் என்பதற்கான மிகுதியான ஆதாரம் நம்மிடத்தில் இருக்கிறது. ***




**நாசரேத் LHMM கன்வென்ஷன் 2022 (நவம்பர் 26,27)**

**இந்த கன்வென்ஷனில் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொள்ளும்படியாக, அன்பான சத்திய சகோதர, சகோதரிகள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம். தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக. சங். 133: 34:10.**

# தேவனுடைய பரிபாலனங்களும் நம்முடைய சாட்சியும்

God's Providences and our witness

**"நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்."** (ரோமர் 10:10).

கிறிஸ்தவர்களாக நம்முடைய அனுபவங்களில் தெய்வீக பராமரிப்புகளை நாம் கண்டுபிடித்து அவற்றின் ஆசீர்வாதங்களை முழுமையாக அனுபவித்து மகிழ வேண்டுமானால், அவைகளை நாடித் தேட வேண்டும். ஆனால் இதற்கு நாம் முதலில் கொண்டிருந்த விசுவாசத்தைக் காட்டிலும் பெரிய அளவில் விசுவாசம் அவசியமாயிருக்கிறது; அத்துடன் விசுவாசம் அதிகரிப்பதற்கு அறிவும், அனுபவமும் இன்றியமையாதது. தேவனுடைய ஜனத்தின் மீது, அவருடைய பராமரிப்பைப் பற்றி படிப்பதற்கு நாம் அப்போஸ்தலர் 8:26-39 வசனங்களை கருத்தில் கொள்வோமாக. இங்கே இது இரண்டு நோக்கு நிலைகளிலிருந்து விளக்கப்படுவதை நாம் காண்கிறோம். (1) சத்திய வெளிச்சத்தை நாடித் தேடுகிறவர்கள் மீது அவருடைய கவனம், அவருடைய நோக்கம், அவர்களுடைய உள்ளார்வ மிக்க வாஞ்சைகள் வெகுமதியளிக்கப்பட வேண்டும் மற்றும், அவருடைய ஏற்பாடு அனுகூலமான சூழ்நிலைகளின் கீழ் சத்தியம் அவர்களைச் சென்றடைய வேண்டும் என்பதாகவும் இருக்கின்றன. (2) அவருடைய பரிபாலனத்தின் கருவிகளாக, பிரதிஷ்டை செய்துள்ள அவருடைய ஜனங்களில் யார் தங்களை அவருடைய ஊழியத்துக்கு தகுதியான நிலைமையில் வைத்துக் கொள்கிறார்களோ, அவர்களைத் தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்திக் கொள்ள அவர் விருப்பமுள்ளவராயிருக்கிறார்.

## உதவிக்காரரான பிலிப்புவின் ஊழியம்

இந்த உதவிக்காரரான பிலிப்பு சபையால் தெரிந்தெடுக்கப்பட்ட ஏழு உதவிக்காரர்களில் ஒருவர் என்பது அப். 6:5-ல் விவரிக்கப்பட்டுள்ளது. உதவிக்காரரான பிலிப்பு தனக்கு அருளப்பட்ட சந்தர்ப்பங்களையெல்லாம், நன்கு பயன்படுத்திக் கொண்டார் என்பதற்கும், தேவையுள்ளவர்களுக்கு சரீரத்துக்குரிய ஆகாரத்தைப் பகிர்ந்தளிப்பதில் மாத்திரம் கவனம் செலுத்தாமல், தன்னுடைய சொந்த இருதயத்திற்கு ஆவிக்குரிய ஆகாரத்தை அளித்து போஷிப்பதின் மூலமாக, கர்த்தருடைய ஊழியக்காரனாகவும், தூதுவராகவும் இன்னும் கூடுதலாக அதிக ஆவிக்குரிய வகையிலான ஊழியம் செய்வதற்காகவும், தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டார் என்பதற்கு அதிக அளவிலான ஆதாரங்கள் இருக்கின்றன. துன்பம் உண்டானதின் காரணமாக எருசலேமிலிருந்து துரத்தப்பட்டவர்களில் பிலிப்பும் ஒருவராக இருந்தார். ஆரம்பகால சபை,




துன்பப்படுதலைப்பற்றி என்ன கூறியிருக்கக் கூடும் - என்பதைக் கவனிக்க இங்கு கொஞ்சம் நிற்போமாக. துன்பம் கடுமையாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் நாம் சிறைப் படுத்தப்படுதல் முதலிய பாடு அனுபவிக்கக் கூடிய இடத்தில் தங்கும்போது, கர்த்தர் நம்மை இங்கேயும் அதைப் போலவே எவ்விடங்களிலேயும் பாதுகாக்க வல்லவராய் இருக்கிறார் என்பதை நாம் உயர்வாக மதிக்கிறோம். இது தெளிந்த தர்க்க அறிவாக இருந்திருக்கக் கூடும்; ஆனால் இது கர்த்தருடைய சபைக்கு அவருடைய வழிகாட்டுதலாகிய, **"ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறுபட்டணத்திற்கு ஓடிப் போங்கள்"** (மத். 10:23) என்ற வார்த்தைகளைப் புறக்கணிப்பதை சுட்டிக் காட்டுவதாயிருக்கும். அந்த துன்பப்படுத்துதல் அவர்களைச் சிதறடிக்கும் நோக்கத்துடன் இருந்தது. கர்த்தருடைய வழிகாட்டுதல்களைக் கவனிக்கத் தவறுவது சபையில் மிகவும் வைராக்கியமும், விசுவாசமும் கொண்ட சிலரை அவருடைய பராமரிப்பின் திட்டவடிவமைப்புகளை விடாப்பிடியாக எதிர்த்து நிற்கும்படி நடத்தியிருக்கக் கூடும்; எனவே இப்போது பாடு அனுபவித்தலை சகித்துக் கொள்ளும்படியாக அழைக்கப்படுபவர்கள் கர்த்தருடைய வழிகாட்டுதலை நினைவிற் கொள்வார்களாக; ஏற்ற ஒரு சாட்சியைக் கொடுத்த பிறகு, சந்தர்ப்பத்தின் கதவு திறந்திருக்குமானால், எங்கே அவர்களுடைய உண்மைத்துவமும் அதிகரிக்கப்பட்ட அறிவும், ஞானமும், "ஆவியின் பட்டயத்தைக்" கையாள்வதில் அவர்களுக்கு இன்னும் மிகுதியான பிரயோஜனமான சந்தர்ப்பங்களைக் கொடுப்பதாக இருக்கிறதோ, அந்த மற்றொரு, இடத்துக்கு வெளியேறிச் செல்வார்களாக. சமாரியாவுக்கு சென்ற பிலிப்பு விஷயத்தில் இதுதான் நடந்தது, அங்கே சத்திய ஊழியமாகிய கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கிக்க ஆரம்பிப்பதில் எந்த நேரத்தையும் அவர் இழந்து விடவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்த சமாரியா பட்டணம் சமாரியா என்று அழைக்கப்பட்ட மாவட்டத்தின் தலைநகராக இருந்தது. அங்கு வசித்த ஜனங்கள் சமாரியர்கள் என்று

அழைக்கப்பட்டனர் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். யூதர்களும் புறஜாதிகளும் கலந்த கலப்பின வம்சாவளியாக இருந்தபடியால், அவர்கள் யூதர்களால் புறஜாதியார் என்றே கருதப்பட்டார்கள்; ஆகவே, "யூதர்கள் சமாரியருடன் (சம்பந்தம் கலவாதபடி இருந்தனர்) எந்த ஈடுபாடும் கொண்டிருந்ததில்லை." மேலும் இந்த ஜனங் களைக் குறித்து நம் கர்த்தர் தம்முடைய சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்பினபோது, அவர்களிடம், "**நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங் களில் பிரவேசியாமலும் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்**" என்று கூறினார் என்பதை நாம் நினைவு கூருகிறோம். (மத். 10:5,6; 15:24). நம்முடைய கர்த்தர் சமாரியர்களை இஸ்ரயேலர்களிட மிருந்து பிரிக்கப்பட்டவர்களாயும், வேறுபடுத்தியும் அடை-யாளப்படுத்திக் காட்டினார். மேலும் இதன் காரணமாகத் தான், நம்முடைய கர்த்தர் சமாரியாவின் கிராமத்துக்குள்ளாக பிரவேசிக்கவோ, அங்கிருந்த வியாதியஸ்தர்களை சுகமாக் கவோ இல்லை: சீஷர்கள் அவ்வழியாகக் கடந்து சென்ற போது, அந்த பட்டணத்து ஜனங்கள், அவர்களுக்கு உணவுப் பொருட்களை விற்பதற்கு மறுத்தனர். இந்த அவமதிப்பின் காரணமாக ஏற்பட்ட கோபத்தினால் தான் யாக்கோபு, யோவான் அப்போஸ்தலர்கள், நம்முடைய கர்த்தரிடம், "**வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா?**" என்று கேட்டார்கள். இயேசு அதற்கு பிரதியுத்தரமாக "**நீங்கள் இன்ன ஆவியுள்ள-வர்கள் என்பதை அறியீர்கள்: மனுஷகுமாரன் மனுஷனுடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்**" என்று கூறினார். பின்பு ஒரு சமயத்தில் ஒரு சமாரிய ஸ்திரீ கிணற்றண்டை கர்த்தரை சந்தித்து அவரிடமிருந்து ஜீவத் தண்ணீரை ஒரு சிறிதளவு பெற்று ருசிபார்த்து, பின்பு அவளுடைய அநேக நண்பர்களையும், அயலகத்தார்க-ளையும் அழைத்து வந்தாள். அவர்களும்கூட ஜீவத் தண்ணீரை ருசிபார்த்து இளைப்பாறுதல் அடைந்தனர். அவர்களில் அநேகர் அவரிடம் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்த போதிலும், அப்போது நம்முடைய கர்த்தரின் சாட்சி, "**நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்... இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது**" என்பதாக இருந்தது. (யோவா. 4:22; லூக். 9:54-56). விஷயம் என்னவெனில், தெய்வீக பரிபாலனத்தின் வழி நடத்துதலின்படி இப்போது பிலிப்பு சமாரியாவுக்கு வந்து அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் என்பது, சுவிசேஷமானது யூதேயாவுக்கு அப்பாற்பட்ட பகுதிகளிலும் பரவுவதற்கான காலம் வந்து விட்டது என்பதை அடையாளப் படுத்துகிறதாக இருந்தது, இவ்வாறாக இந்த நிகழ்ச்சி கர்த்தருடைய மரணத்திற்கு பிறகு மூன்றரை ($3\frac{1}{2}$) வருடங்கள் கழித்தும், எழுபதாவது அடையாளமான வாரங்கள் முடிந்த பிற்பாடும், இந்த யுகத்திற்குரிய சுவிசேஷ அழைப்பு சம்பந்தமான, இஸ்ரயே லருக்கான விசேஷமான தயவு முழுவதுமாக முடிவடைந்து விட்டதை உணர்த்துகிறது - அப்போஸ் தலர்கள் பொதுவாக புறஜாதியாருக்கு எதிரான தீவிர எதிர்ப்புணர்வுகள் கொண்டிருந்ததைக் காட்டிலும், சமாரியர்களுக்கு எதிராக குறைவான அளவிலேயே கொண்டிருந்தார்கள் என்பது தெளிவாகிறது. ஏனெனில் அவர்கள் யூத இரத்தம் கலந்த கலப்பினமாக இருந்தார்கள்.

சமாரியர்கள் சுவிசேஷத்தைப் பெற்றுக் கொள்ளத் தக்க அளவில் முதிர்ச்சி அடைந்திருந்தார்கள், யூதர்கள், புறஜாதியார்களிடம் நடந்து கொண்டது போலவே சமாரியர்களையும் அதிகமாக அலட்சியம் செய்தது அதிக அளவில், அவர்கள் சுவிசேஷ செய்தியைப் பெற்றுக் கொள்ள அவர்களை ஆயத்தப்படுத்தியது; சுவிசேஷ செய்தி சகல ஜாதி மற்றும் வகுப்பு வாத பிரிவினைகளை புறக்கணித்து தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, இயேசுவை மீட்பராக ஏற்றுக்கொண்டு அவருக்கு முழுமையாக பிரதிஷ்டை செய்த எல்லோரையும் அதன் சகோதரத்துவத்துக்குள்ளாக ஏற்றுக் கொண்டது. பிலிப்புவின் பிரசங்கம்,அக்காலத்தில் செய்யப் பட்ட எல்லா பிரசங்கங்களையும் போலவே விசுவாசத்தை ஸ்தாபிக்கும் நோக்கத்திலும், குறிசொல்லும் ஆவி போன்றவைகளைப் பெற்றிருந்த மாயவித்தைக்காரர்கள் மூலமாக, சாத்தானுடைய அற்புதம் செய்யும் கிரியைகளை எதிர்த்து தோற்கடிக்கும் வகையில் ஆவியை மறைவின்றி வெளிப்படுத்துதல், சுகமாக்குதல், முதலியவற்றின் ஆதர வுடன் அமைந்திருந்தது. மாயவித்தைக்காரனாகிய சீமோன் தொழிலாகக் கொண்டிருந்த "மாந்திரீக கலை" என்று அக்காலத்தில் அழைக்கப்பட்ட சாத்தானுடைய சில வஞ்சகமான செயல்களிலிருந்து காப்பாற்றும்படியாக, சத்தியம், சரியான நேரத்தில் சமாரியர்களை வந்தடைந்தது. ஐசுவரியவான்கள் மற்றும் ஏழைகளாகிய ஜனங்கள் மத்தியில் பெருஞ்செல்வாக்கு பெற்றிருந்த அவனை "தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான்" என்று எண்ணி ஏற்றுக் கொண்டிருந்தார்கள் என்பதாக பதிவு செய்யப் பட்டிருக்கிறது. அப்பொழுதிருந்து காலங்கள் மாறத் தொடங் கியது. சூனியமும், மாந்திரீகமும் இதற்கு முன்பு இருந்தது போன்று அதே அளவில் இப்பொழுது உலகத்தை கவர்ந்திழுக்கவில்லை. மகாபெரிய வஞ்சகனும் தனது தந்திரங்களை காலத்துக்கேற்றவாறு மாற்றிக்கொண்டான்.

அப்போஸ்தலர் அறிவிக்கிறபடி, சத்தியத்தை தேடுகிறவர்களை வஞ்சிக்கும் நோக்கத்துடன் அவன் (சாத்தான்) ஒளியின் வஸ்திரத்தை தரித்து, ஒளியின் தூதனாக தன்னைக் காண்பிக்கிறான். இருண்ட யுகங்க ளிலிருந்து கொண்டு வரப்பட்ட மொத்தமான மூடநம்பிக்கை மற்றும் அறியாமையாகிய உறக்கத்தில் இருந்து விழித் தெழுகிறவர்களுக்காக பல்வேறு சூழ்ச்சிகள், கண்ணிகள் மற்றும் பொறிகளை அவன் வைத்திருக்கிறான். இவர்களிடம் அவன் தன்னை ஒரு உயர்தர வேதாகம கண்டன விமர்சகனாக பலவாறு காண்பித்து வேதாகமத்திலுள்ள சத்தியத்தை தேடி அது பெருந்திரளான முரண்பாடுகள் நிறைந்திருப்பதை கண்டுபிடித்ததாகக் காண்பிக்கிறான். வேறு சிலருக்கு அவன் ஒரு பரிணாமவாதியாக தோன்று வதுடன் வேத வசனங்களுக்கு முற்றிலும் எதிர்மாறான கருத்துக்களை போதித்துக் கொண்டு, விழுந்து போதலே நடைபெறவில்லை என்றும் வீழ்ச்சியிலிருந்து மீட்கப்படுதல் மற்றும் அதன் விளைவான திரும்ப கொடுத்தலின் காலம் போன்ற எதுவும் இருக்க முடியாது என்றும் குற்றஞ்




சாட்டடுகிறான். வேறு சிலருக்கு, ஒரு கிறிஸ்தவ விஞ்ஞானியாக காட்டிக் கொள்வதுடன் கிறிஸ்துவின் நாமத்தை ஒரு ஏமாற்றுதல் என்றும், விஞ்ஞானம் மற்றொரு ஏமாற்றுதல் என்றும், ஒரு பாதிப்பை ஏற்படுத்தி,இந்த இரண்டுக்கும் எதிராக ஒரு குழப்பமான நிலையை ஏற்படுத்தி, இந்த வஞ்சனைக்கு தங்களை ஒப்புக் கொடுப்பவர்களுக்கும், அவர்கள் நம்புகிற குணமாக்கும் வல்லமையில் சத்தியத்தை மறுத்து, வேத வசன மறுப்பில் விடாப்பிடியாக நிலைத்திருப்பவர்களுக்கு சில சரீர நிவாரணம் மற்றும் குணமாகுதலை வழங்கி (சீமோன் மேகஸ் மூலம் செய்யப்பட்ட அதே சக்தியின் மூலமாக) குழப்பத்திற்கு ஆதரவு ஏற்படுத்திக் கொண்டான்.

இதே காலப்பகுதியில் நடந்த வேறு சில உதாரணங்களையும் நாம் கருத்தில் கொள்வோம்: ஒன்று, அசுத்தமானவனாக, தனக்கே உரிய அழிவுக்கு சென்ற யூதாஸ், அவன் தனக்கு அருளப்பட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறியதால் இரண்டாம் மரணத்துக்கு சென்றான். யூதாஸுக்கு தோல்வியடைதல் சாத்தியமாயிருந்தது போல, நமக்கும் அதிக அளவிலோ, சிறிய அளவிலோ தோல்வியடைதல் சாத்தியமே. இருதய சுத்தமில்லாமை பணஆசை போன்றவற்றின் காரணமாக, யூதாஸ் தேவனுடைய ஊழியத்துக்கு புறம்பாக்கப்பட்டது போலவே, இருதயத்தில் சுத்தமில்லாமல் இருப்பவர்கள் எல்லோரும் இந்த ஊழியத்திலிருந்து புறம்பே தள்ளப்படுவர் என்பதை நாம் நிச்சயித்துக் கொள்ளலாம். இருதயத்தில் சுத்தமில்லாதிருந்தால் ஒருவரும் எப்படி இந்த ஊழியத்தில் வைக்கப்படமாட்டார்களோ, அதே போன்று அசுத்தமாகிப் போகிறவர்கள் எவரும் இந்த ஊழியத்திலிருந்து வெளியே தள்ளப்படுவர். இந்த விஷயம் அனனியா மற்றும் சப்பீராள் சம்பவம் மூலமாக எடுத்துக்காட்டி விளக்கப்படுகிறது. (அப். 5:1-11). இவர்கள் தங்களுடைய பணஆசை மற்றும் தங்களுடைய ஏமாற்றும் முயற்சியின் காரணமாக, தேவனுடைய உண்மையான ஜனங்களின் ஐக்கியத்தில் இருந்து நீக்கப்பட்டு புறம்பே தள்ளப்பட்டனர். புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மாயவித்தைக்காரனாகிய சீமோன் மேகஸ் மற்றும் வேறு சிலருடைய விஷயங்களிலும் இத்தகைய சம்பவத்தை நாம் நினைவு கூரலாம். (அப். 8:9). சிலர் தங்களுடைய இருதயத்தை மாசுபடுத்திக் கொண்டார்கள், மற்றவர்கள் இதை அறிந்து கொள்ளாமலிருக்கலாம். வேதவாக்கியம் தெரிவிக்கிறபடி (உதாரணமாக: லூக். 16:15) மனுஷருக்குள்ளே மிகவும் மேன்மையாக எண்ணப்படுகிறவர்களில் சிலர் தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறார்கள். "**உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை.** (1 யோவா 3:1; PT '55, பக்கம் 4).

உதவிக்காரனாகிய பிலிப்பு (அப்போஸ்தலனாகிய பிலிப்பு அல்ல) தன்னிடமிருந்த பரிசுத்தஆவியின் வரங்களை பிறருக்கு அருள முடியாதவனாக இருந்தான். ஏனென்றால் இது அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே உரித்தான ஒரு சிலாக்கியமாயிருந்தது. அதனால் அவன் எருசலேமுக்கு தகவல் தெரிவித்தான், உடனடியாக, பேதுரு யோவானுடன் சமாரியாவுக்கு சென்று விசுவாசிகள் மீது கைகளை வைத்து சபைக்கென்று அக்காலத்தில் கர்த்தருடைய ஏற்பாட்டின் ஒரு பாகமான அற்புதமான வரங்களைப் பகிர்ந்தளித்தார்கள். உதவிக்காரனாகிய பிலிப்பு எத்தியோப்பியாவைச் சேர்ந்த அண்ணகரை (eunuch) சீஷத்துவத்துக்குரிய நெருக்கமான வழியில் செல்வதை துவக்கி வைக்க தெய்வீக பரிபாலனத்தின் கருவியாக பயன்படுத்தப்பட்டான். மேலும் அவன் மூலமாக கூடுமானால், ஆப்பிரிக்க தேசத்தில் நற்செய்தியை அறிமுகப்படுத்தவும், சத்திய ஊழியத்தில், தம்முடைய வாயாகப் பயன்படுத்த கர்த்தர் பிரியப்படும் ஒரு மனிதனாகத் திகழ்ந்தார். மேசைகளில் உணவு பரிமாறுதல் போன்ற தாழ்மையான வேலைகளிலும் தம்முடைய உண்மைத்துவத்தை நிரூபித்து மேலும் உயர்த்தப்பட்டு, சமாரியாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் தேவனுடைய ஸ்தானாபதியாக உயர்த்தப்பட்டார். இப்போதோ அவர் மேலும் வழிநடத்தப்பட்டு கர்த்தருடைய ஆசீர்வாதமான ஊழியத்தில் பயன்படுத்தப்பட்டார். கர்த்தருக்கும், அவருடைய காரியத்துக்காகவும் ஊழியம் செய்ய விரும்புகிற சித்தத்தின்படியும் அதே ஆவியை உடைய எல்லோருக்கும் இங்கே உற்சாகமூட்டுதலான ஒரு பாடம் இருக்கிறது. கொஞ்சத்தில் உண்மையுள்ளவர்களாயிருப்பது நிச்சயமாகவே மேலும் பெரிய வாய்ப்புகளைக் கொண்டு வரும்.

அந்த அண்ணகரின் இரதத்தை பிலிப்பு காணும்படியாக அவனை அந்த பாதைக்கு அனுப்பி வைப்பதற்கு எந்த விதத்தில் "பிலிப்புவிடம் கர்த்தர் பேசினார்" என்பது நமக்கு தெரிவிக்கப்படவில்லை, என்றாலும் அவருக்கு கொடுக்கப்பட்ட அறிகுறி, ஒரு யூகம் அல்லது எண்ணத்தைக் காட்டிலும் பிலிப்புவுக்கு போதுமான தெளிவுள்ளதாக இருந்தது என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களின் விசுவாசத்தையும், அதேபோல அவர்களுடைய கிரியைகளையும் நிலைப்படுத்தும் நோக்கத்திற்காக அக்காலத்தில் ஆச்சரியமான விதத்தில் தகவல் தொடர்பு வழிமுறைகளைப் பயன்படுத்தினர் என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். இன்று நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம். "***அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு, அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்.***" (2 பேது. 1:19). சத்திய வெளிச்சம் தேவனுடைய திட்டத்தின் மீதும், அவருடைய வார்த்தையின் மீதும் இப்போது அதிக பிரகாசமாக இருப்பதால், முன்பு அந்நாட்களில் இருந்தவர்களைவிட தற்போது ஒவ்வொரு வழியிலும் நாம் அதிக நன்மைகளைப்

பெற்றிருக்கிறோம் என்று சொல்வது மிகவும் பொருத்த மாகும். அக்காலத்தில் அப்போஸ்தலர்களுக்கும் ஆரம்ப கால சுவிசேஷகர்களுக்கும் உதவிசெய்து வழிகாட்ட தேவனுடைய பரிபாலனமாகிய அற்புதமான தலையீடுகள் தவிர நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகளுக்கும் அப்பால் புதிய ஏற்பாடு எழுத்துகள் எதுவும் இருந்ததில்லை.


தேவனுடைய ஜனங்கள் எல்லார் மீதும் அவருடைய குறிப்பிடத்தக்க பராமரிப்பு இருக்கிறது என்பதைப் பற்றி நாம் அறிந்திருந்தாலும் இந்த அண்ணகரிடம் ஒரு விசேஷித்த தூதுவரை அனுப்பி ஒரு தனிநபர் இப்படி அக்கறையுடன் குறிப்பிடத்தக்க ஒருவருக்கு நீதியைக் குறித்து போதித்தது நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. வெளிப்படையாக, தேவனுடைய பரிபாலனம் மனுக்குலத்தார் எல்லாருடைய காரியங்களின் போக்கிலும் இதே அளவில் பாதுகாப்ப தில்லை. அந்த அண்ணகரின் குணத்தில் ஏதோ ஒன்று, அவனுடைய இருதயத்தின் மனநிலையில் தேவனைக் குறித்த ஏதோ ஒன்று கர்த்தருக்குப் பிரியமாகவும், ஏற்றுக் கொள்ளத் தக்கதாகவும் இருந்ததே, சத்தியத்தில் அவனுக்கு அவசியமாயிருந்த போதனையைக் கொண்டு செல்ல, அவன் சார்பாக இந்த அற்புதம் நடைபெற காரணமா யிருந்தது. அவன் நைல் நதிக்கு வலது கரையிலுள்ள மேரோ ராஜ்யத்தைச் சார்ந்தவன். அந்த ராஜ்யம் அதன் எல்லையாகிய அட்பரா வரைக்கும், தென்திசையில் கார்டம் பகுதி வரையிலும், அங்கிருந்து நீல நைல் நதியின் கிழக்கி லிருந்து அபிஸினியா மலைகள் மட்டும் அமைந்திருந்தது. அரசவை அலுவலரும், ஆழ்ந்த மதப்பற்றுமுள்ளவரான இவர் யூதமதத்துடன் தொடர்புக்கு வந்து அதனால் ஈர்க்கப்பட்டவர் என்பது தெளிவாகத் தெரிகிறது. தம்முடைய தீவிர மத ஆர்வத்தில் மெய்யான தேவனைத் தொழுது கொள்ளவும் அவரைப் பற்றி கூடுதலான அறிவைப் பெறவும் எருசலேம் வரை சென்றார். இவருடைய இந்த காரியம் சமாரியர்கள் மற்றும் கொர்நேலியுவைப் போலவே, இஸ்ரயேலுக்கான, “எழுபது வார” விசேஷமான தயவு முடிவடைந்துவிட்டது என்பதை உணர்த்துகிறது. இந்த அண்ணகர் முழுமையான கருத்துப்படி ஒரு யூதன் அல்ல. அண்ணகர்கள் யூத மார்க்கத்தமைந்தவர்களாக முற்றிலு மாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுமில்லை; சபையில் எந்த சிலாக்கியங்களும் கொடுக்கப்பட்டதும் இல்லை.(உபா. 23:1). அந்நேரம் வரைக்கும், இந்த அண்ணகன், கொர்நேலியு மற்றும் விசுவாசமுள்ள சமாரியர்களைப் போல லாசரு வகுப்பாரின் ஒருபாகமாக, ஐசுவரியவான்களின் வாசலருகே கிடந்து, இஸ்ரயேலுக்கு தேவன் மிகவும் ஏராளமாக வழங்கியிருந்த ஆசீர்வாதங்கள் மற்றும் வாக்குத்தத் தங்களாகிய மேசையிலிருந்து விழும் துணிக்கைகளினாலே தம் பசியை ஆற்றக்கூடியவர்களாகவே இருந்து வந்தனர். இப்போதோ மாற்றம் வந்துவிட்டது. இஸ்ரயேல் வீட்டார் தள்ளப்பட்டு விட்டனர்; சுவிசேஷம் சம்பந்தமாக இஸ்ரயேலின் விசேஷமான தயவு முடிவுக்கு வந்துவிட்டது. லாசரு வகுப்பார் ஆபிரகாமின் மடிக்கு ஏற்றுக் கொள்ளப்படும் காலமும் வந்துவிட்டது. தகப்பனாகிய ஆபிரகாமின் கரங்களில் விசுவாசத்தின் மூலம் அவருடைய உண்மையான பிள்ளை-யாகிய இந்த லாசரு வகுப்பினரின் பிரதிநிதியை அழைத்துச் செல்லவே கர்த்தரின் ஒரு தூதனாக அல்லது தூதுவராக பிலிப்பு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்த அண்ணகர், தாம் உண்மையான ஒன்றாக மேன்மையாக எண்ணியிருந்த மதத்தின் தலைநகரத்துக்கு சென்றிருந்தார். அவர் எருசலேமிலிருந்து திரும்பி வரும் போது, பரிசுத்த தீர்க்கதரிசிகளில் ஒருவரான ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தின் கையெழுத்துப் பிரதி ஒன்றை வாங்கி வந்தார். அது அக்காலத்தில் விலையேறப்பெற்ற பொக்கிஷ மாயிருந்தது. அந்த கையெழுத்துப் பிரதி எபிரெய மொழியில் அல்லாமல், கிரேக்க மொழியில் எழுதப்பட்டிருந்தது என்பது, “ஏசாயாவின்” கிரேக்க பதமாகிய ‘Esias’ (இசையாஸ்) என்ற வார்த்தையினால் சுட்டிக்காட்டப் பட்டதிலிருந்து தெரிகிறது. சத்தியத்தின் மீது அவர் பசியும், தாகமும் கொண்டிருந்தார் என்பது அதை வாங்குவதற்கு அவர் மேற்கொண்ட எல்லா முயற்சியும், அவர் அந்த கையெழுத்துப் பிரதியை வாங்கியதன் மூலமாகவும், அவரது நீண்ட பிரயாணம், அதை அவர் வாசித்துக் கொண்டிருந்தது ஆகியவைகள் மூலம் நமக்கு தெரிகிறது. அவர் வெறுமனே வாசித்துக் கொண்டிருந்தார் என்பதைவிட மேலான காரியத்தை செய்து கொண்டிருந்தார், அதாவது அவர் படித்துக் கொண்டிருந்தார் என்பது அவர் பிலிப்புவிடம் பேசிய வார்த்தைகளிலிருந்து தெரிகிறது. இத்தகைய மனநிலை கொண்டு, சத்தியத்தின் மீது பசிதாகமும் கொண்ட இப்படிப்பட்ட ஒருவர் மீது தேவனுடைய விசேஷித்த பரிபாலனங்கள் வெளிப்படுவதைக் குறித்து ஆச்சரியப்படலாமா? நாம் இதைக் குறித்து ஆச்சரியப்படக்கூடாது. இப்படிப்பட்டவர்களே திருப்தியடை வார்கள், இப்படி தேடுபவர்களே கண்டடைவார்கள். இப்படி தட்டுகிறவர்களுக்கே சத்தியத்தின் கதவு திறக்கப்படும் என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்கு இது முற்றிலும் இசைந்ததாக இருக்கிறது. (மத். 7:7). நம்முடைய தேவன் மாறாதவர், அதே தேவனுடைய பராமரிப்பின் கீழ்தான் நாம் இருக்கிறோம் என்பதை நினைவிற் கொள்வோமாக! அவர் மாறாதவர் என்பதால், உண்மையுடன் சத்தியத்தை தேடுபவர்க்கு அவர் இன்றைக்கும், என்றென்றைக்கும் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் என்ற பாடத்தை நாம் கற்றுக் கொள்வோமாக.




இதில் காலங்களையும், வேளைகளையும் குறித்து இந்த விஷயத்துடன் தொடர்புடைய இன்னொரு பாடமும் இருக்கிறது. தேவன் அண்ணகரை எருசலேமிலுள்ள சபைக்

கூட்டத்தில் கலந்து கொண்டு அப்போஸ்தலர்களுடைய உபதேசங்களைப் பெறும்படியும் வழிகாட்டியிருக்கலாம். ஆனால் அநேகமாக அது அந்த அண்ணகருக்கு அதிக சாதகமாக அமைந்திருக்காது. அப்போஸ்தல போதனை-களைப் பெற்றுக்கொண்ட பின்பு, அவர் அந்த விஷயத்தை அங்குள்ள வேதபாரகர் மற்றும் பரிசேயரிடம் குறிப்பிட்டு பேசியிருந்தால், அதற்கு பிரதியுத்தரமாக ஏறக்குறைய குழப்பமான விளக்கங்களையே பெற்றிருப்பார். தேவனுடைய பரிபாலனத்தின்படி, இவர் கிறிஸ்தவர்களைக் குறித்து சில காரியங்களைக் கேள்விப்பட்டு, மேசியா வந்து சிலுவையில் அறையப்பட்டார் என்று அவர்கள் வலியுறுத்திக் கூறுகிறதையும், முற்றிலும் அநேகமாக அவர் சம்பவத்தின் மறுபக்கத்தையே அறிந்து கொண்டவராக அதாவது பிரதான ஆசாரியர்கள் மற்றும் யூத போதகர்கள் இந்த விஷயம் முழுவதும் மோசடி என்றும், தண்டனையாக நடைபெற்றது என்றும் கூறுவதையே கேள்விப்பட்டிருப்பார். ஒருவேளை அநேகமாக இந்த சிந்தனைகளே, இந்த கையெழுத்துப் பிரதியை வாங்கவும், அதை வாசிக்கும்படியாகவும் வழிநடத்தி பிலிப்பு விளக்கிச் சொல்லும்போது, சத்தியத்தை ஏற்றுக் கொள்வதற்கு சாதகமான மனநிலைக்கு அவரைக் கொண்டு வந்தது. இதிலிருந்து நாம் நம்முடைய சொந்த அலுவல்கள் சம்பந்தமாக, மட்டுமல்லாது பொதுவான சத்திய ஊழியம் சம்பந்தமாகவும், தெய்வீக ஞானம், மற்றும் வல்லமையை முற்றிலுமாக நம்பவும், கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் என்பதையும், அவர்களை சத்தியத்துடன் எந்த அளவுக்கு சிறப்பாக தொடர்புக்குள் கொண்டு வர முடியும் என்பதையும் அவர் அறிந்திருக்கிறார் என்பதையும் நாம் கற்றுக்கொள்வோமாக. சரியாகக் கற்றுக்கொண்டால் தேவனுடைய ஊழியத்தில் நம்முடைய கரங்களைத் தளர்ந்து போக விடாமலிருக்க இந்த பாடம் காரணமாக அமையும். ஏனெனில் தேவனுடைய உண்மையான ஊழியர்கள் பிலிப்புவைப் போல இப்பொழுதும் மிகுந்த ஆர்வத்துடனும், ஊழியஞ் செய்ய ஆயத்தமாகவும் இருப்பார்கள். இது அவர்கள் இருதயத்தைப் பலப்படுத்துவதற்கு உதவுவ தாகவும் தேவனுடைய பிள்ளைகள் அநேகருடைய சமாதா னத்துக்கு தடையாக இருக்கும் பயத்தை நம்மிடமிருந்து நீக்கிப்போடுவதாகவும் இருக்கும். கர்த்தருடைய வார்த்தை-யைக் குறித்து நாம் பயப்படாதிருப்போமாக. எனினும் அவருடைய அறிவிப்பை கவனிப்போமாக. (ஏசா. 55:11). "**அப்படியே என் வாயிலிருந்து புறப்படுகிற வசனமும் இருக்கும் அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.**"




அந்த இரதம் பிலிப்புவை முந்திக் கொண்டு, அநேகமாக அவரைக் கடந்து சென்றிருக்கலாம். அண்ணகர், தான் வாசிக்க வேண்டும் என்பதற்காக பொறுமையாகவே ஓட்டிச் சென்றிருக்கலாம். யூதமத போதகர்கள் ஜனங்கள் மேல் விதித்திருந்த கட்டளையின் படியும், அக்காலத்தில், அப்பிரதேசத்தில் இருந்த வழக்கத் தின்படியும் அவர் சத்தமாக வாசித்துக்கொண்டே சென்று கொண்டிருந்தார்: உண்மையில் விசுவாசிகள் தோழ-மைத்துவமில்லாமல் தனித்து பிரயாணம் செய்கையில் அவ்வாறு வாசித்துக் கொண்டே செல்ல வேண்டும் என்பது யூதர்களுக்கு இடப்பட்ட கட்டளைகளுள் ஒன்றாயிருந்தது. பரிசுத்த ஆவி பிலிப்புவிடம், அந்த அண்ணகரிடம் சென்று வாழ்த்து கூறி சேர்ந்துகொள் என்று எப்படி சொன்னது என்பது தமக்கு அறிவிக்கப்படவில்லை. ஒருவேளை அவர் இந்த வழியே செல்லும்படி ஆச்சரியமாய் அனுப்பப்பட்ட அதே விதத்தில் இருந்திருக்கலாம் அல்லது அநேகமாக அவர் இந்த பாதை வழியே அனுப்பப்பட்டு, தன்னுடைய ஊழியத்துக்கான வாய்ப்பை அவர் எதிர்பார்த்துக் கொண்டு வருகையில், இந்த அண்ணகர் தீர்க்கதரிசனத்தை வாசித்துக் கொண்டிருந்ததைக் கேட்ட போது, இந்த மனிதன் தேவ தயவு பெற்ற மனிதர் என்றும், தன்னுடைய வாழ்க்கையை பிரதிஷ்டை செய்திருக்கிற இந்த சத்திய ஊழியத்தில் சத்திய செய்தியைக் கொடுப்பதற்கு இதுவே ஏற்ற நேரம் என்றும் பிலிப்பு உடனடியாக உணர்ந்திருக்கலாம்.

இது நமக்கு ஒரு ஆலோசனையைத் தருகிறது. இந்த பாடம் தேவனுடைய ஜனங்கள் எல்லாரும், அவர்கள் சத்தியத்தின் ஊழியர்களாயிருக்க விரும்பும் விகிதத்துக்குத் தக்கவாறு ஊழியத்துக்கான சந்தர்ப்பங்களைக் கவனிப் பதில் தொடர்ந்து விழிப்புடன் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்றும் கர்த்தரால் வழிகாட்டப்பட்டு பயன்படுத்தப் படுவதை எதிர்பார்த்து இருக்க வேண்டும் என்ற ஆலோச னையையும் நமக்குத் தருகிறது. கர்த்தருடைய ஜனங்க ளெல்லாரும் சத்தியத்தின் ஊழியக்காரர்களும், பணிவி-டைக்காரர்களுமாயிருக்கிறார்கள். கர்த்தரால் எது விசேஷ மாக வளம் பெறும் என்பதை நாம் அறியாமலிருப்பதால், ஒவ்வொருவரும் நமக்கு அருளப்படுகிற எல்லா வாய்ப்பு களையும் பயன்படுத்த கர்த்தரிடத்திலும், அவருடைய வார்த்தை மீதும் பயபக்திக்கான ஆதாரம் எங்கு காணப்பட்டாலும் நாம் உதவிக்கரம் நீட்ட விழிப்புடன் இருக்க வேண்டும். பிறருக்கு தேவைப்படும் உதவியை அவர்க ளுக்குச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன், கர்த்தர் நமக்கு ஒத்தாசை செய்தது போன்றே அப்படிப்பட்டவர்களுடன் உரையாடுவதற்கான சந்தர்ப்பத்தை நாடி, பிலிப்பு செய்தது போல நாமும் செய்யத் தேடுகிறவர்களாயிருக்க வேண்டும். நாம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதத்தை பிறருக்கு கொடுப் பதற்கு நாம் மிகவும் கவனமுள்ளவர்களாயிருப்பதுடன், இராஜாதி ராஜாவுக்கான ஊழியத்தில் தங்களையும் பிரதிஷ்டை செய்திருப்பவர்களோடுகூட இந்த ஊழியத்தை வாழ்க்கையின் மிக முக்கியமான ஊழியமாக மேன்மை யாகக் கருத வேண்டும்.

## பிலிப்புவின் நேரடியான அணுகுமுறை


**"நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா?"**

என்ற பிலிப்புவின் விசாரணை எல்லா நேரத்திலும் நன்றாக ஏற்றுக் கொள்ளப்படாமலிருக்கலாம்; ஆனால் இது அவருடைய சத்திய செய்தியைக்கொண்டு சேர்ப்பதில் மிகவும் நேரடியான அணுகுமுறையாயிருந்தது. புத்திசாதுரியத்தை பயன்படுத்துவது நல்லதுதான், ஆனால் கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் முக்கியமாக எளிமையான சத்தியங்களைச் சொல்லும்போதும் சுவிசேஷ செய்தியைச் சொல்லும் அவர்களுடைய முயற்சிகளில் போதுமான வெளிப்படைத் தன்மையில்லாமல் இதற்கு மாறாக மிக அதிகமான புத்தி சாதுரியத்தை அல்லது மறைமுகமான போக்கை பயன்படுத்தும் விருப்பமுள்ளவர்களாயிருக் கிறார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். பிலிப்பு புத்திசாதுர்யத்தைக் குறித்து இந்த தவறான எண்ணத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அதிகமாக இருந்திருப்பாரானால், அவர் அந்த அண்ணகரிடம் கொஞ்சநேரம் காலநிலை, மற்றும் அங்கு வளர்த்த பயிர்கள் பற்றியும்; எத்தியோப்பியாவில் அவருடைய வீடு இருக்கும் இடம் பற்றியும் அந்த நாட்டின் சமாதானம் மற்றும் வளம் பற்றியும்; அதன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பற்றியும்; மேலும் அந்த ஜனங்களின் மத சம்பந்தமான நிலை பற்றியும் பேசியிருக்கக்கூடும். அதன் பின்பு படிப்படியாக கேட்கிறவரின் மனதை எல்லாவற்றிலும் மிக முக்கியமான விஷயங்களை விட்டு முற்றிலும் வெளியேற்றியிருக்கக் கூடும். அவர் தன்னுடைய பாடத்தின் கருத்தைக் கேட்டும் அறிந்தும் இருந்தார் என்பதைக் கருத்தில் கொண்டு, “**நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா?**” (அப். 8:30) என்று கேட்டு பிலிப்பு தேர்ந்தெடுத்த முறை மற்றும் மொழிநடையைக் காட்டிலும் அவருடைய செய்திக்கு சிறந்ததொரு அறிமுகத்தை நாம் நினைத்துப் பார்க்கவும் முடியாது. முழுமையான விஷயம்: “**இப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான்**” (அப். 8:30) ஆங்கில மொழிபெயர்ப்பில் உள்ள (Esaias=Isaiah) இசையாஸ் என்பது ஏசாயா என்பதாகும்.

இது சோதிக்கும் ஒரு கேள்வியாக இருந்தது. அந்த அண்ணகர் தான் வாசித்ததைக் குறித்த அறிவைப் பெற் றிருந்திருப்பாரானால், அவர் தன்னிடம் கேட்டதைக் குறித்து குற்றமாக எண்ணாமல் சந்தோஷமாக, “ஆம் சிநேகிதனே, நான் இதனை படிப்பதற்காக தேவனுக்கு நன்றி செலுத்து-கிறேன், இந்த அறிவு எனக்கு மிகவும் விலையேறப் பெற்றதாய் இருக்கிறது. இதனை நீங்களும்கூட அறிந்து கொள்கிறீர்களா?” என்று சொல்லியிருப்பார். ஆனால் அவர் தன்னடைய இருதயத்தில் தவறான நிலைமையைக் கொண்டிருந்திருப்பாரேயானால், அவருடைய பதில் ஏறக்குறைய குற்றத்தை வெளிப்படுத்தக் கூடியதாகவே இருந்திருக்கக்கூடும். “அதைப்பற்றி உங்களுக்கு என்ன? உங்கள் வேலையை மட்டும் பாருங்கள்” என்று சொல்லியிருக்கக் கூடும். அல்லது அவர், இயேசு குறிப்பிட்ட பரியேசர்களைப் போல மாய்மாலமான சிந்தையுள்ள மனதையுடையவராயிருந்தால், அவர் அந்த விஷயத்தைக் குறித்த அறிவைப் பெற்றிருப்பவர் தான் என்று அறிவித்து அதன் பின்பு, தன்னுடைய சொந்த அறியாமையை மூடுவதற்காக, அவர் சில பொதுவான குறிப்புகளைக் குறிப்பிட்டு விட்டு அந்த விஷயத்திலிருந்து இன்னொரு விஷயத்துக்கு திருப்பியிருக்கலாம். பரிசேயருடைய நிலை-மையில் இருக்கிறவர்கள் நம்மிடமிருந்து சத்தியத்தையும் அதற்கும் மேலாக கர்த்தரிடமிருந்து எதையும் பெற்றுக் கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க வேண்டியதில்லை.

கர்த்தருடைய வார்த்தையின்படி சத்தியமானது அதைப் பெற்றுக் கொள்ள இருதயத்தின் சரியான மனப் பான்மை இல்லாத எல்லாரிடமிருந்தும் வேண்டுமென்றே மறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம் – அது நிச்சயமற்றதும், தெளிவற்றதும் அவர்களுக்கு விளங்காததுமாக இருக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும். இது இன்றைய பேர்ச்சபை போதகர்களிடம் காணப்படுகிற ஒரு சிரமமாயிருக்கிறது; பழைய பரிசேயர்கள், வேதபாரகர்கள் மற்றும் பிரதான ஆசாரியர்களைப் போல, அவர்களும் “நாங்களும் குருடரோ? என்கிறார்கள்” அவர்களுக்குத் தெரியும் என்று வாதிடுகிறார்கள், ஆனால் அவர்களுக்கு தெரியாது என்பது அவர்களுக்குத் தெரியும் என்பது நமக்குத் தெரியும். ஆகையால் நம்முடைய கர்த்தர் (யோவா. 9:39-41) அவர்களுடைய முன்னோடிகளுக்கு சொன்னது போலவே, அவர்களுடைய குருட்டுத்தனம் இப்பொழுதும் தொடர்கிறது. எப்படியெனில் அந்த தன்னிறைவு மற்றும் மனதின் நேர்மையற்ற நிலைமையில் தன்னிடம் இல்லாத அறிவு மற்றும் விசுவாசம் ஆகியவை தன்னிடம் இருப்பதாக நினைத்துப் பெருமை கொள்கிற போது, ஒருவரும் தேவனால் போதிக்கப்படுவதை எதிர்பார்க்க முடியாது.

கர்த்தர் தமது கிருபையான செய்தியை விசேஷமாக யாருக்கெல்லாம் அனுப்புகிறாரோ அவர்கள் அனைவரும் இந்த அண்ணகரைப் போல குறிப்பிடத்தக்க அளவில் – ஆர்வம், நேர்மையுடன் சத்தியத்தை தேடுகிறவர்களாக தங்களுக்குத் தெரியாது என்பதை ஒத்துக் கொள்வதற்கு பயப்படாமலும், கர்த்தர் அருளுகிற எந்தவித ஒத்தாசை யையும் பெற்றுக் கொள்வதற்குப் பயப்படவோ, வெட்கப் படவோ மாட்டார்கள். அந்த அண்ணகர் பிலிப்புவிடம், “நீங்கள் ஆசாரியரா? அல்லது ஒரு பரிசேயரா? அல்லது ஒரு நியாய சாஸ்திரியா?” என்று விசாரிப்பதற்காக இரதத்தை நிறுத்தவில்லை. தேவனிடத்திலிருந்து வந்த செய்தி என்று தான் நம்புவதை தன்னுடைய கைகளில் வைத்திருந்ததே அவருக்கு போதுமானதாக இருந்தது. அது தான் புரிந்து கொள்ளாத பல்வேறு வாக்கியங்கள், வாக்குத்தத்தங்கள் முதலியன அடங்கியிருந்தன என்பதை அவர் அறிந்திருந் தார். இந்த தீர்க்கதரிசனத்தைக் கொடுத்த தேவன் அதற்கு விளக்கமும் தருவதற்கு வல்லமையும், சித்தமுமுள்ளவர் என்று நம்பி அதற்கான விளக்கத்தைத் தேடினார். மேலும் தன்னுடைய கேள்விகள் மீது வெளிச்சம் வீசக்கூடிய அளவுக்கு அப்படிப்பட்ட விளக்கத்தைக் கொடுக்கக் கூடியவர் யாராயினும் அந்த வழிமுறையின் மூலமாகவே தான் ஒரு தேவனுடைய போதகர், ஒரு சத்திய ஊழியக்காரன் என்றும் சத்திய வெளிச்சத்தைத் தாங்கி நிற்பவர் என்றும் நிரூபிக்கப்படக் கூடியவராகவே இருப்பார்.




## சத்தியத்தைத் தேடுபவரின் சரியான மனநிலை

அந்த அண்ணகர், "**ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால், அது எனக்கு எப்படித் தெரியும்?**" என்று சொன்ன போது அந்த பதிலில் அது அடங்கியுள்ளது. சத்தியத்தைக் குறித்த அவருடைய தேடுதலில் அவர் மிகவும் வாஞ்சையுள்ளவராய் இருந்தார். அதனால் பிலிப்புவின் கேள்வியில் உள்ளடங்கியுள்ள உதவி செய்வதற்கான அந்த வெறும் ஆலோசனையே அவருடைய ஆர்வத்தை முழுவதுமாக எழுப்பிடப் போதுமானதாய் இருந்தது; அவர் பிலிப்புவை தன்னுடைய ரதத்தில் தன்னுடன் அமர்ந்திட வேண்டிக் கொண்டு, அத்துடன், என்னென்ன செய்திகள் தனக்கு கொடுக்க முடியுமோ அவற்றையெல்லாம், தனக்கு அளிக்கும்படி அனுமதித்தார். மிகவும் உத்தமமான ஒரு இருதயத்தை உடையவராகவும் அதோடுகூட இன்றும் மிக மனத் தாழ்மையும், கற்றுக்கொள்ளும் தன்மையும் அவர் கொண்டிருந்ததால், கர்த்தருடைய விசேஷமான தயவைப் பெற்றுக் கொள்வதுடன், கோடிக்கணக்கானோர் தகுதியற்றவர்களாக கடந்து சென்று கொண்டிருக்கும் அதே வேளையில், கர்த்தர் அவருக்கென்று பிரத்தியேகமாக ஒரு தூதுவர் அனுப்பியதைக் குறித்து நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

இன்றைக்கும் அதே தான், கர்த்தர் பிலிப்புவை அந்த அண்ணகரிடம் அனுப்பிய அதே அற்புதமான முறையில், தம்முடைய ஜனங்களை பொதுவாக நேரடியாக வழிகாட்டி நடத்துவதில்லை. அப்படியிருந்த போதிலும் இதே வகையில் சாந்த குணமுள்ளவர்களுக்கும், கேட்கிற காதுள்ளவர்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு பொதுவான அறிவுரைகள் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (ஏசா. 61:1; மத். 13:9; வெளி. 2:7). தீர்க்கதரிசி அறிவிக்கிறபடி நம்முடைய செய்தி நொறுங்குண்ட இருதயங்களைக் கட்டுவதாக இருக்க வேண்டும்; இருதயங்களை நொறுக்குவதாக இருக்கக்கூடாது; நாம் சபைப் பிரிவினருக்கோ, சீறுகிற நாய் வகுப்பாருக்கோ, பன்றி போன்ற ஜனங்களுக்கோ (மத். 7:6) மாறுபாடான குண-முள்ளவர்களுக்கோ பிரசங்கிக்காமல், சாந்த குணமுள்ளவர்களுக்கே பிரசங்கிக்க வேண்டும். கடினமான மற்றும் பிடிவாதமுள்ள இருதயமுள்ளவர்களிடம் தேவன் வேறொரு வழியில் ஈடுபாடு செய்வார். அவர் துன்பம் மற்றும் உபத்திரவமாகிய பட்டறைக்கல் மீது அவர்களை உடைத்துப் போட்டு தமக்கே உரிய ஏற்ற சமயத்திலும், வழிமுறையிலும் அவர்களைச் சீர்திருத்துவார். நாம் இந்த வேதவாக்கிய விதிக்கு மாறாக, நம்முடைய நேரத்தைப் பயனற்ற முயற்சிகளில் வீணாக்கக்கூடாது. சுவிசேஷ செய்தியைப் பெற்றிராமல் வெறும் சீர்திருத்தச் செய்தியை மட்டும் கொண்டிருப்பவர்கள் அரசியல் சீர்திருத்தங்கள், சமூக சீர்திருத்தங்கள், ஒழுக்க நெறி சீர்திருத்தங்கள் பற்றி பிரசங்கிக்கட்டும். ஆனால் நாம் நற்செய்தியை சாந்த குணமுள்ளவர்களுக்குப் பிரசங்கித்து, நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களைக் கட்டுவோமாக.

அந்த அண்ணகர், ஏசாயா தீர்க்கதரிசனத்தில் நம்முடைய கர்த்தரை ஆட்டுக்குட்டியாகச் சுட்டிக் காட்டிய, அதாவது தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக எதிர்த்து சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் அவமானப்படுத்தப்பட்டதையும், அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுக்கப்பட்டு போவதைப் பற்றியும், தம்முடைய சந்ததியைக் குறித்து ஒரு கேள்விக் குறியை ஏற்படுத்திய அந்த குறிப்பிட்ட பாகத்தை கருத்தில் கொண்டது, தற்செயலாக அல்லாமல் தேவனுடைய பரிபாலனத்தால் நடந்தது என்பது தெளிவாகத்தெரிந்தது. அந்த பாவப்பட்ட அண்ணகர் குழப்பமடைந்தது ஆச்சரியமல்ல; அந்த யூதர்கள் எல்லாரும் கூட புதிராக எண்ணி குழப்பமடைந்ததில் ஆச்சரியமில்லை. சந்தேகமின்றி இந்த தீர்க்கதரிசனமும் மற்ற பெரும்பாலான தீர்க்கதரிசனங்களைப் போலவே, நிறைவேறும் வரைக்கும் முழுமையாகப் புரிந்துகொள்ளப்பட முடியாததாகவே இருந்தது. அதன்பின்பு, அதன் நிறைவேறு–தலாகிய வெளிச்சத்தில் மட்டுமே, அத்துடன் பரிசுத்த ஆவியின் போதனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இருதயத்தில் சரியான மனநிலையில் இருப்பவர்களால் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

இது தொடர்பாக நாம் கவனிக்க வேண்டியது: (1) வேதவாக்கியங்கள் "**ஆவியின் பட்டயமாகிய தேவனுடைய வார்த்தைகளாயிருக்கும்**" அதே வேளையில் அவை நம்மை ஞானியாக்கவும் வல்லமையுள்ளது. கர்த்தருடைய ஏற்ற சமயம் வரும் வரை அவற்றைப் புரிந்து கொள்ள முடியாது. (2) அவை பரிசுத்த ஆவியின் வழி நடத்துதல் மற்றும் போதனைகளால் மட்டுமே அறிந்து கொள்ளப்பட முடியும், எனினும் (3) சத்தியத்தைத் தேடுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவி வேதவாக்கியங்கள் மூலமாகவோ, மனதின் எந்த ஒரு நடைமுறை மூலமாகவோ பயிற்றுவிக்கப்படாமல், ஆவியின் ஜீவனுள்ள பிரதிநிதிமூலமாக – சுவிசேஷ செய்தி மூலமாக, உடன் ஊழியக்காரன் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. தேவனுடைய உண்மையான பிள்ளைகளாகிய உண்மையாக சத்தியத்தைத் தேடுபவர்கள் சரியான வழிமுறைகளைப் பின்பற்றி கர்த்தருடைய வசனத்தின்படி அவர்மீது ஏற்றமுறையில் நம்பிக்கை வைக்கும் போது, சபையிலுள்ள போதகர்கள் மூலமாக தேவன் அளிக்க விரும்புகிற ஒத்தாசையைப் புறக்கணிக்கவோ மறுத்து தள்ளவோ மாட்டான். அவன், சபைப்பிரிவுகள் மற்றும் கள்ளப் போதகர்களிடமிருந்து வேறுபட்டு, தேவன் எழுப்பபோகிற அப்படிப்பட்ட போதகர்களைக் கண்டு கொள்ள மட்டுமே நாடுவான்; கர்த்தர் எழுப்புகிற போதகர்களை அறிந்து கொள்ளுகிற அவனுடைய சிறந்த பாதுகாப்பான மற்றும்

நிச்சயமான முறைகளில் ஒன்று: "**நமக்குப் போதனையாக முன்பு எழுதியிருக்கிற**" தேவனுடைய வார்த்தையை எளிமை யாகவும், தெளிவாகவும், சாதாரணமாகவும் ஆக்கித்தருகிற அவர்களுடைய திறமை மூலமே ஆகும்.

பிலிப்புவின் சத்திய ஊழியத்தில் இது மட்டுமே அவரால் அளிக்கப்பட்ட நம்பிக்கைக்குரிய ஒரே ஆதாரமா யிருந்தது. அவர் அப்போஸ்தலர்கள் மூலமாக தேவனால் போதிக்கப்பட்டு, இப்போது கேட்கிற காதுள்ள அண்ணகருக்கு எப்படி கிறிஸ்து உலகத்தை மீட்கும் பொருட்டு இவ்வுலகத் திற்குள் வந்தார், மனுஷனுடைய பாவங்களுக்காக மரித்து எழுந்தார், மகிமைக்குள்ளாக எடுத்துக் கொள்ளப்பட்டார் என்கிற எளிமையான சம்பவத்தை எடுத்துரைக்க திறமை யுள்ளவரானார். இப்போது அதற்கிடையில் வாக்குத்தத்தத் தின்படி கிறிஸ்துவின் மூலமாக உலகத்தை ஆசீர்வதிப்பதற்கு முன்பாக தேவன் ராஜ்யத்தில் இயேசுவுடன் உடன் சுதந்தரர்களாக இருப்பதற்கு "சிறுமந்தை" என்கிற தெரிந்து கொள்ளப்பட்டவர்களை அழைத்தார்; இந்த தெரிந்தெடுப்பு நிறைவடைந்த பின்பு, மேசியாவானவர் (தலையாகிய இயேசு, சரீரமாகிய சபை) மகிமையிலும், ஆட்சி செய்தல் மற்றும் ஆசீர்வதிக்கும் அதிகாரத்தில் உலக மனுக்குலத்தாருக்கு வெளிப்படுவார். – இவரே நீண்ட காலமாய் எதிர்பார்க்கப்பட்ட மேசியா; இவருடைய வேலைதான் உலகத் தோற்றத்தி லிருந்தே பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாராலும் முன்னுரைக் கப்பட்டு வந்தது. (அப். 3:19-21).

பிலிப்பு சந்தேகமின்றி அந்த அண்ணகரிடம், தங்களைப் பாவிகளென்று உணர்ந்து கொண்டவர்களும், கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களும், அவருடைய சீஷர்களாக மாறுவதற்கு விரும்பியவர்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதையும்கூட விளக்கி யிருப்பார். அந்த அண்ணகர், தான் பின்பற்ற வேண்டிய நிலை என்ன என்பதைத் தீர்மானிக்க நீண்டநேரம் எடுக்கவில்லை. ஆட்டுக்குட்டியானவர் தன்னை எங்கு நடத்தினாலும், அவரைப் பின்பற்றுவதற்கு அவருடைய இருதயத்தின் ஆயத்த நிலை அவர் உடனடியாக ஞானஸ்நானம் பெற தயாரானதில் சுட்டிக்காட்டப்படுவதாகத் தெரிகிறது. பிலிப்பு அவரைக் கிறிஸ்துவின் சபையின், உடன் அங்கத்தினராக ஏற்றுக் கொள்ள ஆயத்தமானதுடன் அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும் ஆயத்தமானார். அந்த அண்ணகர் கிறிஸ்தவ ஸ்தாபன போதனைகளை (Catechism) கற்றுக் கொள்ள வேண்டும் என்றோ அல்லது வேறு எதையாவது அறிக்கையிட வேண்டும் என்றோ கேட்டுக் கொள்ளப்படவில்லை, இப்படிபட்டவைகள் இருண்ட யுகங்களில் நல்லெண்ணம் கொண்ட மனிதர்களால் தவறாக அர்த்தம் கொள்ளப்பட்டு, அவசியமானவை என்று அறிவிக்கப்பட்டு, வேதாகமத்தின் விளக்கம் என்றும் சொல்லப்பட்டது. "இப்போது நான் உங்கள் பெயரை எழுதிக் கொள்கிறேன், நீங்கள் அப்படியாக சபையில் ஒரு அங்கமாகக் கருதப்படுவீர்கள். அதனால் எத்தியோப்பி யாவில் நீங்கள் பிரசங்கம் செய்ய அதிகாரத்தை வாங்கித் தருவேன்" என்று கூறவும் இல்லை. அக்காலத்தில் இந்த விஷயம் இப்பொழுது போல குழப்பப்படவோ, மூடி மங்கலாக்கப்படவோ இல்லை. பிலிப்பு சுவிசேஷத்தை அதன் எளிய தன்மையில் பிரசங்கித்தார். அந்த அண்ணகரும் அதை அதே முறையில் ஏற்றுக் கொண்டார்; அந்த சுவிசேஷத்துடன் கூடவே, அதை அறிவிக்கிற உரிமையும் அதிகாரமும் சென்றது. "**என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக**" (எரே. 23:8). விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆவியின் ஒளியூட்டப்படுதலைப் பெற்றவர்கள் நற்செய்திகளை அறிவிக்க முழு அதிகாரமும் பெறுகிறார்கள்.

இது நம்முடைய பாட தலைப்பு வசனத்துடன் முழுவதும் இசைவாக உள்ளது. அது மனதில் புரிந்து கொள்ளப்படாத இருதயத்தில் விசுவாசிக்கப்படாத "ஒரு மதக் கோட்பாடு வாயினால் அறிக்கையிடப்படுகிறது" என்று சொல்லவில்லை. இவ்வாறாக பெயருக்கோ அல்லது வழிமுறைகளுக்கோ எவ்வித தெய்வீக ஒப்புதலோ அல்லது அதிகாரமோ இல்லாமல் மனுஷரால் ஸ்தாபிக்கப்பட்ட பெயரளவிலான சபையின் உறுப்பினருரிமை பெறப் படுகிறது. அதற்கு மாறாக இது மிகவும் எளிமையாகவும், அழகாகவும் சொல்லுகிறதென்னவெனில், கர்த்தருடைய பார்வையில் வலிமையும் அல்லது முக்கியத்துவமும் உள்ளவை என்று எது மதிப்பீடு செய்யப்படுகிறதோ, அது தனிப்பட்ட ஒருவரால் அவனது சொந்த இருதயத்தில் நம்பப்படுகிறது. ஓரளவிற்காவது புரிந்து கொள்ள முடியாத எதையும், அவன் தனது இருதயத்தில் விசுவாசிக்க முடியாது. இது இரகசியங்கள் பற்றிய நம்பிக்கை அல்ல. உண்மைக ளைப் பற்றிய நம்பிக்கை ஆகும். அதைத் தொடர்ந்து "**புறம்பே இருக்கிறவர்களுக்கு**" இன்னும் இரகசியங்களாயிருக்கிற காரியங்களும் கூட புரிந்து கொள்ளக்கூடிய காரியங்களாகி வருகிறது.

இந்த பாட தலைப்பு வசனத்தின் இரண்டாவது பாகம் முதல் பாகத்தைப் போலவே முக்கியமானதாயிருப்பது தெளிவாகிறது: "**இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.**" வாய்பேசமுடியாத ஒரு விசுவாசி, தன்னு டைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் ஒருபோதும் நிச்சயப்படுத்த முடியாது என்பதை இது உணர்த்துகிறது. நாங்கள் இயல்பாகவே பேசமுடியாத வர்களைக் குறித்து பேசாமல், வாய் என்ற சொல்லை நம்முடைய இருதயத்தின் செவிகள் மற்றும் நம்முடைய புரிந்து கொள்ளும் அறிவின் கண்கள் என்று நாம் சொல்லுகிற அதே அர்த்தத்தில் புரிந்து கொள்கிறோம். தேவனுடைய கிருபையை காண்கிற மற்றும் கேட்கிற ஒரு இருதயம், அதை உண்மையாகவே ஏற்றுக் கொள்கிற இருதயம் என்பதால், ஏற்ற சமயத்தில் செவிகொடுத்து கேட்ட மற்றும் கண்ட விஷயங்கள் குறித்து அது மிகவும் ஆர்வமுள்ளதாக மாறுகிறது. அது தன்னுடைய சந்தோஷம், சமாதானம், நம்பிக்கை, மனஉறுதி மற்றும் நன்றியுடைமை ஆகிய வெளித்தோற்றமான வெளிப்படுத்தல்களிலிருந்து விலகியிருக்க முடியாது. அப்போஸ்தலர்கள் அறிவித்த படி, "**நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாம லிருக்க கூடாதே**" (அப். 4:20).

சத்திய வெளிச்சத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் தேவனுடைய திட்டத்தில், தேவனுடைய கிருபையைக் கண்டு கொண்டவர்கள், கர்த்தர் கிருபையுள்ளவர் என்பதை ருசித்தவர்கள், "முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்

பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்... இவ்வளவு பெரிதான இரட்சிப்பு" பற்றிய அதிசயங்களைக் கேள்விப்பட்டவர்கள் ஆகிய கிறிஸ்தவர்களாகிய இவர்கள் அனைவரும் அமைதியாக இருக்கவும் கூடாது, இருக்கவும் முடியாது, தங்களுடைய வெளிச்சத்தை மரக்காலின் கீழ் வைக்கவும் கூடாது, அப்படி அவர்கள் செய்வார்களானால், அவர்கள் தங்களுடைய வெளிச்சத்தை அணைத்துப் போடுகிறார்கள், தங்களுடைய வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தி விடுகிறார்கள் என்று அர்த்தமாகிறது. அப்படியே தொடர்ந்து இருப்பார்களானால், முடிவாக இரண்டாம் மரணத்தில் அவர்கள் அழிக்கப் படுவதை அர்த்தப்படுத்துகிறது; ஏனெனில் கர்த்தரைக் குறித்தும், அவருடைய வார்த்தையைக் குறித்தும் தெளி வாகப் பகுத்தறிந்து, ஆசீர்வாதங்களையும் தேவனுடைய தயவையும் பெற்றுக்கொண்ட பிறகு அவைகளைக் குறித்து வெட்கப்படுவார்களானால், ராஜ்யத்தில் ஒரு பங்கைப் பெறவோ, சிங்காசனத்திலோ அல்லது அதற்கு முன்பாக நிற்கவோ தகுதியற்றவர்களாகி விடுவார்கள். அப்படிப் பட்டவர்களைக் குறித்து கர்த்தரும் ஏதாவது மற்றும் எல்லா சூழ்நிலைகளிலும் வெட்கப்படுவார். (லூக். 9:26). ***




# புதிய வானங்களும் புதிய பூமியும்

New Heavens and New Earth

**வே**தாகமத்தின் அநேக விலையேறப்பெற்ற போதனைகள் அடையாளக் குறியீடு பாஷையில் அறிவிக்கப்பட்டுள்ளன. உண்மையில், அனைத்து பாஷைகளும் சித்திர வடிவமான-வைகளே. இவ்வாறாக, "வானங்கள்" என்பது உன்னதமான அல்லது சபை சம்பந்தமான மற்றும் தற்போதைய காரியங்களின் ஒழுங்குடன் சம்பந்தப்பட்டுள்ள ஆவிக்குரிய வல்லமையாக இருக்கின்றன. "பூமி" என்பது தாழ்வான அல்லது சமுதாய காரியங்களின் ஒழுங்காக இருக்கின்றது. வேதாகம உபயோகத்தில் "பூமியின்" உயர்ந்த மலைகள் மாபெரும் அரசாங்கத்துக் குரிய பாதுகாப்பு கோட்டைகளை அடையாளமாகக் காட்டுகிறபோது சமுத்திரம் சமுதாயத்தை மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ முழுவதும் விழுங்க விரும்புகிற அமைதியற்ற கூட்டத்தை அடையாளப்படுத்திக் காட்டுகிறது. இவ்வாறு, ஜலப்பிரளயத்திற்கு முன்னிருந்த "வானங்களும்" "பூமியும்" அல்லது ஆவிக்குரிய மற்றும் சமுதாயத்துக்குரிய நிலைமைகள், அங்கே அழிந்து போனதின் நிமித்தமாக, காரியங்களின் புது ஒழுங்காக எழும்பியதும் இன்னும் தொடர்ந்திருக்கிறதான மதம் மற்றும் சமுதாயம் சார்ந்த நிலைமைகளைப் பற்றி வேதாகமம் கூறுகிறது. தற்போதய மதம் மற்றும் சமுதாயம் சம்பந்தமான ஒழுங்கு இப்பொழுதிருக்கிற உலகம் அல்லது யுகம் என்று அழைக்கப்படுகிறது. இது "**இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகம்**" என்றும் அழைக்கப் படுகிறது. ஏனெனில், தீமை மேலான அதிகாரத்தில் இருக்கிறது. வேதவாக்கியங்கள் புதிய "வானங்களும்" புதிய "பூமியும்" (மதம் மற்றும் சமுதாயம்) இருக்கும் என்று வாக்களிக்கின்றன. அதில் நீதி வாசமாயிருக்கும் என்றும் நமக்கு நிச்சயப்படுத்தப் பட்டிருக்கிறது. - ஏசா. 65:17; 2 பேது. 3:13.

பரிசுத்த பேதுரு தற்போதைய மதம் சம்பந்தமான வானமும் மற்றும் சமுதாயம் சம்பந்தமான பூமியும் ஒரு மாபெரும் நெருப்பில் அகன்று போகுதலை வர்ணிக்கிறார். ஒரு காலத்தில் இது சொல்லர்த்தமாகவே பூமி எரிந்து போகுதலைச் சுட்டிக் காட்டுவதாக தவறாக புரிந்துக்கொள்ளப்பட்டது. தெய்வீக உறுதிமொழியானது அதற்கு மாறாக, "**பூமி என்றைக்கும் நிலைத் திருக்கிறது**" என்றும், அதாவது தேவன் "**பூமியை வெறுமையா யிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்தார்**" என்று குறிப்பிடுகிறது. இந்த வேத பகுதியிலுள்ள "அக்கினி" என்பது ஆதாரப்பூர்வமாக, வேதாகமத்தில் அடிக்கடி உபயோகிக்கப்பட்ட அதே அடையாளக் குறியீடாக இருக்கிறது. இது தற்போதைய மதம் மற்றும் சமுதாயம் சார்ந்த ஒழுங்கை அராஜகக் குழப்பத்தில் முற்றிலுமாக அழிக்கப் போகிற உபத்திரவத்தையும் அழிவையும் குறித்துக் காட்டுகிறது - தானி. 12:1; மத். 24:21.

வருங்காலத்துக்குரியதான புதிய ஆவிக்குரிய வானங் கள், பரம மகிமை மற்றும் வல்லமையில் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உரியதாயிருக்கும். தேவனுடைய வாக்களிக்கப்பட்ட ராஜ்யமாக, அது பூமியை அரசாட்சி செய்யும். எல்லா தேசங்கள், ஜனங்கள், கோத்திரத்தார் மற்றும் பாஷைக்காரர்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படாதவர்களை உயர்த்தி ஆசீர்வதிக்கும். புதிய பூமியானது, புதிய வானமாகிய மேசியாவின் ராஜ்யத்தின் வழிகாட்டுதல் மற்றும் போதனைகளின் கீழ் அவ்வேளையில் உருவாக்கப்பட்டுவரும் புதிய சமுதாய ஒழுங்காக இருக்கும் - மத். 6:10. ***

Visit us at : www.biblestandardindia.com

For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY